
Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு - 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 22 ஞாயிற்றுக்கிழமை (07.08.2011) பக்கங்கள் 16 ஓசை - 312



ரணிலின் கனவு (03)



வித்தியாசமான திருவிழா (11)



கோரிக்கை வரவேற்கத் தக்கது (08)



இப்ப இருக்கிறதே போதும் (10)

# ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு எட்டப்படும்



## நிமல் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

சகல மக்களினதும் அவசிய தேவைகளை பூர்த்தி செய்வதுடன் நாட்டின் இறைமையையும் பாதுகாக்கும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினருடனான 10 ஆம் கட்டப் பேச்சுவார்த்தைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் சிந்தனையில் மாற்றம் வேண்டும்



## இரா. சம்பந்தன்

(கொழும்பு)

அரசாங்கத்துடனான அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தை தொடர வேண்டுமானால் அரசாங்கத்தின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அத்துடன் எழுத்து மூலமான தனது நிலைப்பாட்டை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நாம் எடுத்துள்ள முடிவு அவசரப்பட்டு எடுக்கப்பட்டதொன்றல்ல. பேச்சுவார்த்தை என்ற பெயரில் அரசியல் தீர்வு காணுவதை இழுத்தடித்துக் கொண்டு போவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## திருடர் தொல்லை யாழில் அதிகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் பட்டப்பகல் திருடர்களின் கைவரிசை அதிகரித்துக் காணப்படுவதால் நகருக்கு வரும் மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பூட்டி வைக்கப்பட்டுள்ள சைக்கிள்களைத் திருடுவது மற்றும் மோட்டார் சைக்கிளில் வைக்கப்படும் தலைக்கவசத்தை எடுத்துச் செல்வது போன்ற திருட்டு நடவடிக்கையில் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இத்திருட்டுக்களில் இருந்து தமது உடைமைகளைப் பாதுகாக்க மக்கள் விழிப்பாக இருந்து செயற்படவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

# அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பொது உடன்பாட்டுக்கு வாருங்கள்

## சம்பந்தன் எம்.பிக்கு அமைச்சர் டக்ளஸ் பதிலடி



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களிடமிருந்து வாக்குகளை மட்டும் அபகரிக்கும் கூட்டு முயற்சிகளை அடியோடு வெறுக்கும் நாம் அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தரும் வகையிலான நிரந்தரத் தீர்வை எட்டுவதற்காக பொது உடன்பாட்டுத் தளத்திலிருந்து அரசுடன் பேசுவதற்கு நாம் என்றும் தயாராகவே இருக்கிறோம் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் அண்மையில் வெளியிட்ட கருத்துத் தொடர்பாக கருத்துக் கூறும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் சார்பாக (15 ஆம் பக்கம் பார்க்க)

## எண்ணெய் அகழ்வு மன்னாரில் ஆரம்பம்

(கொழும்பு)

மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டதாக அமைச்சர் பசில் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன் பலனாக இலங்கைக்கு பொருளாதார ரீதியில் பாரிய இலாபம் கிடைக்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் எண்ணெய் அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கக்கூடும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆண் குழந்தை திடீர் மரணம் மர்மம் அறிய பிரேத பரிசோதனை

### கோண்டாவிலில் நடந்த துயரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் நேற்றுப் பிற்பகல் இறந்த நிலையில் ஒன்றரை வயதுக் குழந்தை ஒன்றினுடைய சடலம் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டதாக அவ் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். கோண்டாவில் பகுதியிலிருந்து சுகவீனமுற்ற நிலையில் குறித்த குழந்தையை பெற்றோர் சிகிச்சையின் நிமித்தம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததாகவும், இடைநடுவில் அக்குழந்தை மரணமாகியதையடுத்து நல்ல நிலையில் இருந்த குழந்தை திடீரென சுகவீனமுற்று இறந்ததன் காரணமாகவே குழந்தையின் பெற்றோர் அக்குழந்தையின் சடலத்தை யாழ். போதனா (15 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு முஸ்லிம்களுக்கு இந்தியா உதவ வேண்டும்

### இந்திய ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் மீண்டும் தமது தாயக பிரதேசத்தில் மீள்குடியேறும் முஸ்லிம் மக்களுக்கு தேவையாகவுள்ள வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்தி தருமாறு கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன், இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய சபாநாயகர் மீரா குமாரின் அழைப்பின் பேரில் கடந்த 3 ஆம் திகதி இலங்கையிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் அமைச்சர் றிசாட் பதியுதீனும் இடம்பெற்றிருந்தார்.

அக்குழுவினர் இந்திய ஜனாதிபதியை சந்தித்த போது, வடக்கில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க விசா பெறுவதற்கு ஆங்கில அறிவு முக்கியமல்ல

### யாழ். கருத்தமர்வில் அமெரிக்க துணைத்தூதர்

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க விசாவிற்கு விண்ணப்பிக்கும்போது ஆங்கில அறிவு முக்கியமான அம்சமாகக் கருதப்படப் போவதில்லை என அமெரிக்கத் துணைத்தூதுவர் கத்திரின் பொண்டிங் தெரிவித்தார்.

நேற்று மாலை 4.00 மணயிளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள அமெரிக்க விசா நிகழ்ச்சித் திட்ட கருத்தரங்கில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

ஐக்கிய அமெரிக்காவில் நிரந்தரமாக உழைப்பதற்கும், வாழ்வதற்கும் அமெரிக்க அரசாங்கத்தினால் இந்நிகழ்ச்சித் திட்டம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## முதியோர்களுக்கு விசேட செயலமர்வு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த முதியோர் சங்கங்களுக்கான விசேட கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகம்தருமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (104)

## பூகோளப் பாதுகாப்பு விழிப்புணர்வு புறப்படுகிறது சைக்கிள் பயணம்

(யாழ்ப்பாணம்)

உலகத்தில் ஏற்படுகின்ற அழிவுகளை பாதுகாக்கும் நோக்கில் 5 வருடத்தில் ஒரு இலட்சம் கிலோ மீற்றரை இலக்காகக் கொண்டு சைக்கிள் பயணம் ஒன்றை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிக்கவிருப்பதாக ஒப்ரிமும் (Optimum) நிறுவனத்தின் பிரதம நிகழ்ச்சித் திட்ட அதிகாரியான ஆர்.ராஜா ரட்ணசிங்கம் குணசேகர தெரிவித்துள்ளார்.

இதன்போது கின்னஸ் சாதனை ஒன்றையும் நிலைநாட்டவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது (15 ஆம் பக்கம் பார்க்க)



# சமூக அபிவிருத்திக்கு கூட்டுப் பொறுப்பு அவசியம்



கிராம மக்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் எல்லோரும் இணைந்து கூட்டு முயற்சியின் ஊடாகச் சிறுவர்களின் கல்விக்கான அடித்தளத்தை அமைக்கவேண்டும்.


நேற்று முன்தினம் கிளிநொச்சி அம்பாள்குளம், அம்பாள் முன்பள்ளியில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி அம்பாள்குளம், அம்பாள் முன்பளளியில் இடம்பெற்ற விளையாட்டுபபோட்டி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவவேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பள்ளிகள் சமூகத்தின் நுழைவாயில்கள் பிள்ளைகளை சமூகத்தின் அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதில் முன்பள்ளிகளின் பங்கு மகத்தானது. எனவே தான் சிறந்த முன்பள்ளி, கல்விச் செயற்பாட்டின் மூலம் பசுமரத்து ஆணி போன்று பதிகின்ற சிறார்களின் மனதை நல்ல ஆற்றல் மிக்க சிறந்த அறிவு சார்ந்ததாக மாற்றி அதன் மூலம் நல்லதொரு சமூகத்தை உருவாக்க முடியும் என தெரிவித்தார்.

ஈ.பி.டி.பி.யின் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிராம அலுவலர் ஜோன் பப்பிஸ், அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலய அதிபர் திருமதி மாணிக்கவாசகம், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், கிராமமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்

## ரமழான் சிந்தனை



நோன்பு அல்லாஹுதஆலாவுக்கு மிகவும் பிரியமான இபாதத்துகளில் ஒன்றாகும். நற்செயலகள் அனைத்திற்கும் மலக்குகள பிரதி பலனை வழங்குகின்றார்கள். ஆனால் நோன்பு எனக்காக மட்டுமே நோற்கப்படுவதனால் நோன்பின் கூலியை நானே வழங்குகின்றேன் என அல்லாஹ் கூறியுள்ளான். (105)




## தெய்வீக இசை அரங்கு

நல்லூர் முருகன் மஹோற்சவ காலத்தில் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8.00 மணிவரை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தெய்வீக இசை அரங்கு நடைபெற்று வருகின்றது.

இந்த நிகழ்வில் நான்காம் நாளான இன்று பொ.சுபாஷ்சந்திரனின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இவரது பாராட்டுக்கு அணிசேர் கலைஞர்களாக வயலின் ஏ.ஜெயராமன், ஹார்மோனியம் - என்.செல்வச்சந்திரன், மிருதங்கம் கே.கண்ணதாசன், தபேலா ஆர்.சிவராமன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

* * * * * *

## ஆன்மீகச் சொற்பொழிவுகள்

சொண்ட் நிறுவனத்தினால் நல்லூர் முருகன் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6 மணிமுதல் நடைபெற்றுவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று "குருநாதனாய் வருவான்" என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * * * * *

இந்து சமய கலாசா அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை நடத்தும் சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகளில் இன்று எஸ்.பாலசசந்திரன் "இந்துமத விழுமியப் பண்புகள் என்னும் விடயம் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப் பாடசாலை, ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

## கலந்துரையாடல்

(ஆணைக்கோட்டை)

நவாலி சின்னப்பா வீதி புனரமைப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலி கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் பு.சிவலிங்கம் மற்றும் உயர் அதிகாரிகளும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்ககளும் கலந்துகொண்டு வீதி அகலிப்பு சம்பந்தமான விளக்கங்களை வழங்கவுள்ளனர். (104)

## வருடாந்தத் திருவிழா

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த மாதம் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்குத் திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுரூப பவனியுடன் சிறப்பாக முடிவுற்றது.

திருவிழாவிற்கான ஒழுங்குகளைத் தாளையடிப் பங்குத் தந்தை அருட் திரு ஜேம்ஸ் நாதன் தலைமையில் ஆலய நிர்வாக குழுவினர் மேற்கொண்டிருந்தனர். (70)


ST.JOHN'S COLLEGE, JAFFNA.
GHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.
ADMISSION - 2012 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

**தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2012**

01. அ) விண்ணப்பப் படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.09.2011 முதல் 15.09.2011 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ) எக்காரணங்கொண்டும் 15.09.2011 இற்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
இ) எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
ஈ) விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.09.2011 வியாழக்கிழமை அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டா.

02. தரம் 01இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்படவேண்டும்.
03. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.
04. ஒரு படிவத்திற்கானதும், பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 500.00
05. வயதெல்லைகள் :-
அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2006 இற்கும் 31.01.2007 இற்குமிடையில பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின்னர பிறந்திருத்தல் வேண்டும்.
இ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2001 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.1997 இல் அல்லது அதற்குப் பின்னர பிறந்திருத்தல் வேண்டும்.
06. தரம் 12 (A/L 2014 Batch) விண்ணப்பதாரி 01.02.1995 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
07. தரம் 04, தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 11.10.2011 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு :-
01. தகுதியுடையயவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்குக் குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02. தரம் 12 இற்கும் (A/L 2014 Batch) தமிழ் / ஆங்கில மொழி மூலம் கற்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப் பரீட்சை 07.01.2012 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் புதிய வகுப்புக்கள் 11.01.2012 ஆரம்பமாகும் ஆங்கில மொழி மூலக் கற்கைநெறி விஞ்ஞான, கணித, வர்த்தகத் துறைகளுக்கு நடைபெறும்.
03. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ் / ஆங்கில மொழி மூலம் 2014 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின பின்னர் விண்ணப்பிக்கவும்.

(C/853) அதிபர்கள்



# பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் முதன் முதலில் ISO 9001 தரச்சான்றிதழை பெற்றுக்கொண்டதும், வாழ்நாள் முழுவதும் மருத்துவமனைப்படுத்தல் காப்பீட்டு வழங்குவதும், அரசிற்குச் சொந்தமான காப்புறுதிக் கம்பனியைக் கொள்வனவு செய்த ஒரே ஒரு நிறுவனமும், 100 இற்கும் மேற்பட்ட கிளைகளுடன் இலங்கையில் விரைவாக வளர்ச்சியடைந்துவரும் ஒரே ஒரு நிறுவனமும், ஆரம்பம் முதல் இன்றுவரை ஒரே பெயரில் மாற்றமேதுமில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கும் ஒரே ஒரு நிறுவனமான

**ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தில் பணியாற்ற ஆர்வமுள்ளவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**



விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது நிர்வாகக் கட்டமைப்புடன் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) மற்றும் (முல்லைத்தீவு) மாவட்டங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி :- 01 :- வியாபார அபிவிருத்தி நிறைவேற்றுனர்.**

**பதவி :- 02 :- வியாபார அபிவிருத்தி உத்தியோகஸ்தர்.**
மேற்படி இரு பதவிகளுக்கும் அடிப்படை ஊதியம் E.P.F. / E.T.F, Incentive என்பன உண்டு.

**பதவி :- 03 :- விற்பனை அலுவலர்** (பிரயாண கொடுப்பனவு மற்றும் கட்டுப்பண சேகரிப்பிற்குரிய தரகுப் பணம் வழங்கப்படும்.

**பதவி :- 04 :- பிரதேச முகவர்கள் / பிரதிநிதிகள்.** (ஓய்வுபெற்ற அரச அலுவலர்கள் மற்றும் காப்புறுதிக் கம்பனிகள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள். N.G.O.களில் பணியாற்றுபவர்களும் பகுதிநேரமாகப் பணியாற்ற முடியும்.)

**தகமைகள் :-** க.பொ.த. சாதாரண தரம் கட்டாயமாக 6 பாடங்கள் (கணிதம் முக்கியம்) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு :-** SLII (ஆயுட்காப்புறுதி தொழில் நுட்பத்தகமை பரீட்சையில்) சித்தியடைந்திருப்பவர்களுக்கும், ஏற்கனவே காப்புறுதித்துறையில் பணியாற்றியவர்களுக்கும் திறமைக்கேற்ப பல வாய்ப்புக்களுடன் கூடிய சலுகைகள் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 15.08.2011**

முகவரி :-
எ.குமார் (A/PM)
ஜனசக்தி காப்புறுதி நிறுவனம்,
கண்டி வீதி, (கிளிநொச்சி பழைய ஆஸ்பத்திரி முன்பாக),
கிளிநொச்சி.

"காப்புறுதி என்றால் ஜனசக்தி"

குறிப்பு :- அந்தந்த மாவட்டங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் நேர்முகத் தேர்விற்கு பிறிதொரு தினத்தில் அந்தந்த மாவட்டங்களுக்கு அழைக்கப்பட்டு மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தெரிவு இடம்பெறும். S.M.S. (எஸ்.எம்.எஸ்) மூலமாக உங்களது சுயவிபரங்களைப் பதிவு செய்வதாயின் 0778499866 என்ற இலக்கத்திற்கு S.M.S. அனுப்பவும்.

(C/553)

ஊக்கமும், செயலும் ஒன்றாகவே பயணம் செய்கின்றன. மன ஊக்கமே உணர்வாகி செயலாக வெளிப்படுகிறது.

-வில்லியம்ஸ்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## தெய்வதரிசனமும் தீப்புண்ணும்!

சமத்துவமாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்கிற அவா மனிதர்கள் எல்லோருக்குமே பொதுவாயுள்ளதுதான். ஆனால், நமது யதார்த்த நிலை, சூழல், பிறருடைய சுதந்திரம் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாமல் நமது சுதந்திரத்திற்காக ஆவேசப்பட்டுப் பொங்க முடியாது. மற்றவற்றைக் கணக்கிலெடுக்காத 'நமது சுதந்திரம்' என்ற வீம்புக் கோஷத்தில் எந்த நியாயமுமில்லை.

இதுகுறித்து ழான் பவுல் சார்த்தர் ஓர் உதாரணம் தருகிறார். மனிதர்கள் அனைவரும் சுதந்திரமாக இருக்கும்படி விதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடும் அவர், இத்தகைய சுதந்திரம் ஆபத்தாகிவிடக் கூடிய சூழ்நிலை பற்றியும் சொல்கிறார். மலை முகட்டில் நின்றுகொண்டிருப்பவனுக்கு இன்னும் ஓரங்குலம் நகர்வதற்கான சுதந்திரம் என்பது அதலபாதாளத்திற்கே இட்டுச் செல்வதாகி விடும். எப்போது, எதை நம் சுதந்திரம் என்று தேர்வு செய்கிறோம் என்பதில் விழிப்புணர்வு அவசியம் என்கிறார். நம்முடைய வாழ்க்கையை எப்படி நகர்த்திச் செல்ல வேண்டும் என்பதற்கான தேர்வுகள் நம் கையிலேயே உள்ளன.

நாம் அறிந்துகொள்ள வேண்டியது, சுதந்திரத்திற்காக நமது வீராவேசங்கள் முறுகல்களை எப்போது பயன்படுத்துவது, இணக்கத்தையும் விட்டுக்கொடுப்பையும் எப்போது பயன்படுத்துவது என்ற தெளிவைத்தான். இனி நாம் பெற்றுக்கொள்ளக் கூடுமான தீர்வை அதிகாரங்களை விட மேலான அதிகாரங்களை உரிமைகளைப் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய சூழல்களை எல்லாம் இந்தத் தேர்வுப்பிழை காரணமாகக் கோட்டை விட்டதை இப்போது எல்லோருமே அறிவோம்.

கொள்கையில் விடாப்பிடியாக இருப்பதும், சமரசங்கள் இணககங்களை வெறுப்பதும், இலட்சியத் தூய்மைவாதமும் உயிர்ப்பலிகளுக்கே இட்டுச்செல்லும் என்பதை இப்போது நாம் வரலாற்று நூல்களைப் படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. இலட்சியத்திற்காகப் புகழுடன் சாவதற்கு மனிதர்களைத் தயார் செய்வதென்பது, அந்த இலட்சியத்திற்காக வாழ்வதற்கு அவர்களைத் தயார் செய்வதைக் காட்டிலும் எளிதானது என்பதையும் நாம் பார்த்து விட்டோம். நம் இலட்சியத்திற்கு – இலக்குக்குத் தேவை என்று நியாயப்படுத்தப்பட்டால் நாம் எந்த அநீதியையும் ஏற்போம், எந்தப் பாதகத்துக்கும் துணை நிற்போம் என்பதே நம் வரலாற்றிலும் நிரூபிக்கப்பட்டது.

நமக்குரிய நியாயங்கள் இருந்தால் நாம் எதையும் செய்யலாமா என்பதே கேள்வி. அந்த நியாயங்கள் மாபெரும் அழிவை ஏற்படுத்தித் தவறாகிப் போகுமென்றால், அதுவரை நம்மால் போற்றிப் புகழ்பாடி முன்னெடுக்கப்பட்ட செயல்களின் பொறுப்பை யார் ஏற்பது?

பிரபல உளவியலாளர் சிக்மண்ட் ஃபிரெய்ட்: "பல்வேறு வகைகளிலும் உள்ள மக்களை, ஒரே மாதிரியாகப் பசியுடன் வைத்திருக்க வேண்டும். பசியின் உந்துதல் அதிகரிக்கும்போது, தனித்தனியான இயல்புகள் மறைந்துவிடும். அவர்களிடத்தில் ஒரே மாதிரியான ஒரு உணர்வு தோன்றும்" என்று சொன்னார். மக்களிடத்தில் ஏகப்பிரதிநிதித்துவத்தை மூச்சுமுட்ட வலியுறுத்துபவர்கள் பலரின் நோக்கம் மக்கள் தொடர்ந்து கஷ்டத்திற்குள்ளிருக்க வேண்டும் என்ற உள்விருப்பமாக மாறுவது இவ்வாறுதான். ஆகவே, கஷ்டங்களை மாற்றுவதற்கான எத்தனங்களை 'அது நடக்காத அலுவல்' என்ற முடிந்த முடிவுக்குள் தள்ளிவிட்டு, புதிது புதிதாய் கஷ்டங்களைக் கண்டுபிடித்துப் பிரலாபம் வைத்துக்கொண்டிருப்பதையே அரசியலாய்ச் செய்துவருவதைப் பார்க்கிறோம்.


இணக்கமோ சமரசமோ அற்ற கொள்கைப் பிடிவாதமானது மக்களை ஒரே பசியுடனும் தொடர் துன்பங்களுக்குள்ளும் வைத்திருப்பதைத் தேவையாக்குகிறது. அழிவையும் சாவுகளையும் தவிர்க்க முடியாதவையாக நியாயப்படுத்துகிறது. சாதாரண மக்களைப பலிப் பொருட்களாக்கி விளையாடும் இலட்சியவீம்பில் சங்கடம் ஏதுமின்றி இருப்பது மட்டுமல்ல அதைக் கொண்டாடவும் செய்கிறது.

தங்களது ரோசத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும் ஏற்ப மட்டுமே தீர்வு வரவேண்டும் என்று அழுத்தமான பிடிப்போடு இருப்பவர்கள், அந்த லட்சியமே முக்கியம் என்று நினைக்கின்றவர்கள் அடிப்படையில் மிகுந்த சுயநலவாதிகள். அவர்களிடம் எல்லையற்ற அகந்தையே நிறைந்து கிடக்கிறது. அதனாலேயே சாதாரண சமூக வாழ்வுக்கான சமரசங்களை செய்துகொள்ள மறுப்பவர்களாயிருக்கிறார்கள். இது தங்களது லட்சியங்கள் வேட்கைகளுக்காக சாதாரண மக்களைக் கஷ்டப்படவைக்கவும் பலிகொடுக்கவும் தயங்காத தீவிரமாக மாறிவிடுகிறது. இந்தத் தீவிர மனநிலை என்பது, தீக்குள் இறங்கினால் தெய்வதரிசனம் ஏற்படுவதாகச் சொல்பவர்களின் மனநிலையை ஒத்தது. தீ சுட்டால் எரிகிறதே என்று பதறும் பல்லாயிரக்கணக்கானவர்களுக்காக இவர்கள் பேசுகிறார்கள் – அரசியல் செய்கிறார்கள் என்பதுதான் நம் சூழலின் துயரம்!

– ஆசிரியர்.

# ஆட்சியை கைப்பற்றும் எண்ணமே எதிர்க்கட்சியிடம் இருக்க வேண்டும்

## இப்படிக் கூறுகிறார் ரணில்



(கொழும்பு)

அதிகாரத்திலுள்ள இந்த அரசாங்கத்தையும், ஊழலையும் இல்லாதொழித்து, நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் எதிர்கட்சியிடம் இருக்கவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோதே எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு வருகின்றேன்.

இந்தக் குறிக்கோளுடனேயே அனைவரும் செயற்பட வேண்டும் தமக்கு எதிர்காலம் உள்ளதா இல்லையா என எண்ணும் தரப்பினருடனும் கலந்துரையாட வேண்டும் என்றார்.

இந்த நிகழ்வின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சனல்-4 ஒளிப்பட உண்மைத்தன்மையை தேசிய நல்லிணக்கக் குழு ஆராய்கிறது

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல் - 4 தொலைக்காட்சியால் சில நாட்களுக்கு முன்னர் வெளியிடப்பட்டு இருக்கின்ற போர்க் குற்றச்சாட்டு ஆதார வீடியோவின் உண்மைத் தன்மை தொடர்பான விசாரணைகளை தேசிய நல்லிணக்க ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் இவ்விசாரணையின் முடிவும் சேர்க்கப்படவுள்ளது. நல்லிணக்க ஆணைக் குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க இத்தகவலை தெரிவித்துள்ளார்.

ஆயினும் விசாரணையாளர்களின் பெயர்களை வெளிப்படுத்த மறுத்து விட்டார். பெயர்கள் வெளியிடப்பட்டதால் விசாரணையாளர்கள் கடந்த காலங்களில் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஆணைக்குழு எதிர்வரும் நவம்பர் மாதம் இறுதி அறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்க உள்ளது என்றார்.

# உடையார்கட்டு தெற்குப் பகுதியில் 510குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முரசுமோட்டை)

செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த உடையார்கட்டுப் தெற்கு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 510 குடும்பங்களைச் சேர்ந்த 1768 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் சி. ஜெயக்காந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரண்டாம் திகதி செட்டிக்குளம் நலன்புரி முகாமில் இருந்து இவர்கள் அழைத்துவரப்பட்டு உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தால் வழங்கப்படும் மீள்குடியேற்ற நிதியாகிய 20ஆயிரம் ரூபா, உணவல்லாத பொதிகள் மற்றும் உடனடியாக உணவு சமைப்பதற்குரிய உருளைக்கிழங்கு கருவாடு போன்ற பொருட்கள் நிவாரண உணவுப் பொருட்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இப்பகுதி மக்களுக்காக நடமாடும் மருத்துவ சேவை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டு மருத்துவ வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு வடக்கு வள்ளுவர்புரம், தேராவில், சுதந்திரபுரம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த உறவினர் நண்பர்களின் வீடுகளில் தங்கி உள்ளவர்கள் அன்றையதினம் மீள்குடியேறக் கூடிய ஆயத்தங்களுடன் உடையார்கட்டு மகாவித்தியாலயத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.

இதுவரை காலமும் தங்கியிருந்த பகுதி கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அப்பகுதி உதவி அரசாங்க அதிபரின் மேல் ஒப்பமிட்டு விடுப்புக் கடிதத்தைக் கொண்டுவர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (110)

# மதுப்பிரியர்களின் தொல்லை யாழ்.நகரில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் மதுப்பிரியர்களின் தொல்லை இரவில் அதிகரித்துக் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த மதுப்பிரியர்கள் மதுவின் தாக்கத்தை அறியாமல் கைகலப்பில் ஈடுபடுவதோடு தகாத வார்த்தைகளையும் பிரயோகித்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட சம்பவங்களில் ஈடுபடும் மதுப்பிரியர்கள் மீது பொலிஸார் தடியடிப் பிரயோகம மேற்கொண்டு வருகின்றனர்.

மதுப்பிரியர்களின் இந்த அட்டகாசம் நாளில் தினம் தினம் அதிகரித்துச் செல்கின்றன. (வி)

# முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

(பருத்திருத்துறை)

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு III, இப் பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான .நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணப் பொதுச் சேவையின் கனிஷ்ட ஊழியர்களை மேற்படி பதவிக்குத் தரமுயர்த்துவதற்காகவும், புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்காகவும் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கே இந்த நியமனக் கடிதங்கள் வழங்கபபடவுள்ளது.

உரியவர்கள் குறித்த தினத்தன்று மண்டபத்துக்கு சமூகமளித்து கடமைக்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தாங்கள் கடமைக்கு அறிக்கையிட்ட பின்னரே முறையான நியமனக்கடிதம் வழங்கப்படும் என்பதோடு கடமைக்கு அறிக்கையிடும் திகதியே இப்பதவிக்கு உரித்தான தங்களது முதல் நியமனத் திகதியாகக் கருதப்படும் என வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (109)

# 10 கிராம் கஞ்சாவுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம்

(முரசுமோட்டை)

பரந்தன் பகுதியில் 10 கிராம் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவருக்கு பத்தாயிரம் ரூபா அபராதமும் பத்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒருவருட கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கிக் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தர விட்டுள்ளார். (110)

## கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளி மழலைகளின் கலைவிழா இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பிரபலம் வாய்ந்த ஆதவன் முன்பள்ளி மழலைகளின் 16ஆம் ஆண்டுக் கலை விழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் முன்பள்ளியின் நிர்வாகி சி.மகேந்திரன் ஆசிரியர் தலைமையில் மிகவும் சிறப்புற இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியில் கல்வி பயிலும் 120இற்கும் மேற்பட்ட மேற்பிரிவு மழலைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் தங்கள் கலைகளை வெளிப்படுத்தவுள்ளனர். தனி நிகழ்வுகள், குழு நிகழ்வுகள் எனப் பல்வேறு கலை அம்சம் கொண்ட நிகழ்வுகள் இரு மொழிகளிலும் இடம்பெறவுள்ளன.

இந்த முன்பள்ளியில் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு என இரு பிரிவுகளில் 250 இற்கு மேற்பட்ட மழலைகள் கல்வியில் ஈடுபட்டுள்ளதுடன் 10 ஆசிரியர்கள் இவர்களுக்கான கற்பித்தலில் ஈடுபட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.


## நல்லூர் ஆலயச் சூழலில் இலவச மருத்துவ சேவை

(குருநகர்)

யாழ். மாநகர சபை சித்த மருத்துவ நல்லூர் நிலையத்தில் அக்குபஞ்சர் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நிலைய வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

வாரத்தில் மூன்று தினங்கள் இவ்வைத்திய சேவை செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரைக்கும் பின்னர் பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரைக்கும் இந்த அக்குபஞ்சர் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இலவச வைத்திய முகாம் காலை 7.00 மணி தொடக்கம் 8.00 மணி வரையும் மாலை 4. மணி தொடக்கம் 6.00 மணி வரையும் நடைபெறும். அதற்கிடைப்பட்ட நேரங்களில் வழமைபோல நல்லூர் யாழ். மாநகர சபை சித்த மருத்துவ நிலைய வைத்திய சேவைகள் இடம்பெறும். நல்லூர் கந்தன் வருடாந்த திருவிழா ஆரம்பமாகியுள்ள நிலையில் இச்சேவை மக்களுக்கு பயன்தரும் வகையில் அமையும் என நம்பப்படுகின்றது. (68)




## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

யாழ். உசன் இராமநாதன் மகாவித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை அப்பாடசாலைக் கேட்போர் கூடத்தில் பாடசாலை அதிபர் சி. மனோகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக சாவகச்சேரிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு. சிவானந்தம் கலந்து கொண்டார்.

ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளரும், தற்போதைய சாவகச்சேரி நகர சபை உறுப்பினருமான சாள்ஸ் மற்றும் சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் ஞானலிங்கம் ஆகியோர், மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

# மாணவர் அடிப்படைத் தேர்ச்சியை வளர்க்கவே தமிழ்த்தினப் போட்டி

### வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர்

(மருதனார்மடம்)

மாணவர்கள் அனைவரும் அடைந்திருக்க வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளை அவர்களிடையே வளர்த்தெடுக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் தமிழ் மொழித் தினப் போட்டிகள் நடத்தப்படுகின்றன என்று வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராசேந்திரன் தெரிவித்தார்.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்மொழித் தின, பரிசளிப்பு விழாவில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்:

பாடசாலை மாணவர்களிடையே நாம் நடத்துகின்ற சிறுகதை, நாடகம், கவிதை, கவிதை நயத்தல், கட்டுரை முதலான எழுத்தாக்கப் போட்டிகள் இத்தகைய மொழித் தொடர்பாடல் தேர்ச்சியினை அவர்களுக்கு வளர்க்கின்றன.

எனவே, இலங்கைப் பாடசாலைக் கல்வி அமைப்பில் புதிய கல்விச் சீர்திருத்தப் பிரேரணைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதனால் அதில் கூறப்பட்ட தேர்ச்சிகளை மாணவர்கள் அனைவரும் அடைந்திருக்க வேண்டும்.

தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தில் மறைமலையடிகள் தனித் தமிழ் இயக்கத்தை ஆரம்பித்து தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வை ஊட்டினார். இதனைப் பொறுக்காத ஒரு சிலர் தமிழ் மொழி முகம் இல்லாத மொழியென வசைபாடினர். இந்நிலையில் தமிழில் முகம் என்ற சொல் இல்லை என்றும், அதற்குப் பதிலாக வதனம் என்ற சொல்லே தமிழில் வழங்கி வருவது மரபு என்றும் தெரிவித்த அவர் முகம் என்ற சொல் வட மொழிச் சொல்லாகும் என்று கூறினார். (06)

## கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டட வேலைகள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத இக் கட்டட வேலைகளைச் செய்து முடிப்பதற்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு 35 மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.(10)

## கத்திவெட்டு இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

குற்றச்செயல் ஒன்றிற்காக சிறையில் தண்டனை அனுபவித்து நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் யாழ். நீதிமன்றத்திற்கு கையொப்பமிடச் சென்றவேளை அவரை வழிமறித்த இளைஞர் குழு ஒன்று அவரைக் கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவ் இளைஞர் ஆபத்தான நிலையில்யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் நல்லூர் ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த இ. சந்திரகுமார் (வயது - 29) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

சம்பவதினமன்று குறித்த இளைஞர் நீதிமன்றத்திற்கு கையொப்பமிட வந்தவேளை, ஆறு பேர் கொண்ட இளைஞர் குழுவினர் அவரை வழிமறித்து வெட்டிப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு முதல் நாள் குறித்த இளைஞரின் வீட்டிற்குச் சென்ற குறித்த குழுவினர் அவ் இளைஞரின் தந்தை இரத்தினம் என்பவரையும் வெட்டிக் காயப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எஸ்)

## கரவெட்டி மயானத்தில் சுகாதார சீர்கேடு தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுப்பு

(கரணவாய்)

கரவெட்டி ஞானாசாரியார் பாடசாலை வீதியில் அமைந்துள்ள வேருண்டி மயானத்தில் கால்நடைகளின் கழிவுகளினால் சுத்தமற்ற நிலையில் துர்நாற்றம் வீசுவதாகப் பொதுமக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

இம் மயானப் பகுதியில் சிலர் கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டிய பின்னர் கழிவுகளை அவ்விடத்திலேயே விட்டுச் செல்வதால் அவை பல நாட்களாக அவ்விடத்திலேயே கிடப்பதனாலேயே துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உடல் தகனக் கிரியைகளுக்காக வரும் பொது மக்கள் அவற்றை மேற்கொள்ள முடியாது அவல நிலைக்கு உள்ளாவதுடன் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பாக மயானத்திற்குப் பொறுப்பானவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## கரைநகரில் பொதுக்கிணறுகள்

(யாழ். நிருபர்)

காரைநகரில் உள்ள பதினொரு கிராமங்களுக்கு 55 பொது மலசல கூடங்களும் 11 பொதுக் கிணறுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. காரைநகரில் மிகவும் பின்தங்கிய கிராமங்களான ஊரி, தோப்புக்காடு, மருதபுரம், பிட்டியெல்லை போன்ற கிராமங்களுக்கே பொது மலசலகூடங்களும், பொதுக் கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன. (10)





யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பட்டதாரிகளுடனான கலந்துரையாடலில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும், வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பட்டதாரி ஒருவருக்கு மீள் இலக்கு நியமனம் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம் : சுமித்தி)

## மகோற்சவம்

(யாழ். நிருபர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க விஷ்ணு ஆலயமான பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நேற்றைய தினம் நடைபெற்ற கொடியேற்றத் திருவிழாவில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து 20 தினங்கள் திருவிழா சிறப்பாக நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் மகாபாரதம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். (10)

# சாதனை மாணவர்களைப் பாராட்டுவது சக மாணவர்களுக்கு உந்துசத்தியாகும்

## நல்லூர்க் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா

(யாழ். நிருபர்)

கிராமப்புறத்து சிறிய பாட சாலைகளின் .மாணவர்கள் சாதனை படைக்கும்போது அவர்களைச் சிறந்த முறையில் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். இவ்வாறான பாராட்டு வைபவங்களின் மூலமே ஏனைய மாணவர்களிடையேயும் சாதனை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்க முடியும் என்று நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா கூறினார்.

வடக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்ற கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவன் கணேசலிங்கம் டிலக்சனின் பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

மைதான வசதியோ, பயிற்றுவிப்பாளரோ, விளையாட்டு உபகரணங்களோ இல்லாத சூழ்நிலையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்குச் சென்று அங்குள்ள விளையாட்டு உபகரணங்கள், பயிற்று விப்பாளர்களின் உதவியுடன் பயிற்சி பெறறுச் சாதனை நிலைநாட்டிய பலக்சனும் பயிற்றுவிப்பாளர்களும்மிகப் பெரிய பாராட்டுக்குரியவர்கள்.

விளையாட்டுத்துறையில் சாதனை படைக்கும் மாணவர்கள் கல்வித்துறையிலும் சிறந்து விளங்குவார்கள். இந்த மாணவன் எதிர்காலத்தில் சிறந்த வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ வருவதற்கு பெற்றோரும் ஆசிரியர்களும் ஊக்கமளிக்க வேண்டும்.

கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் சாதனை படைக்கும் மாணவர்களை ஊக்குவிப்பதற்கு புலம்பெயர்ந்த நாடுகளில் வசிப்போரும், பழைய மாணவர்களும் முன்வரவேண்டும் எனவும் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் சு.சண்முககுமார் தனது தலைமையுரையில்,

மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்ட டிலக்ஷனுக்கு 'கல்விக் காருண்யன்', ஈ.எஸ்.பி.நாகரட்ணம், நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஊடாக ஒரு துவிச்சக்கர வண்டியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். அவருக்கு பாடசாலைச் சமூகத்தின் ஊடாக நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். (10)

# அங்கத்தவர் பணியாளர்களுக்கு 35 ஈருருளிகள் வழங்கப்பட்டன



(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் பணியாளர்களுக்கான ஈருருளி வழங்கும் நிகழ்வு அணமையில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் செல்லத்துரை மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

பாரம்பரிய மற்றும் சிறு கைத தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிதி உதவியில் அங்கத்தவர் பணியாளர்களுக்கு ஈருருளிகள் 35 வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முல்லைத் தீவு மாவட்ட அமைப்பாளர் அ.ஜெயராஜ், ஒட்டுசுட்டான் பிரதேச கூ.அ உத்தியோகத்தர் சிறிகரன், முல்லைத்திவு மாவட்ட ப.தெ.வ.அ..கூ சங்கங்களின் இணை முகாமையாளர் சி.வேதவனம் ஆகியோர் கருத்துரை வழங்கியதோடு ஈருருளி வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் சங்க வளர்ச்சிக்காக ஒட்டுசுட்டான் ப.தெ.வ. அ.கூ சங்கத்திற்கு கணினித் தொகுதி கையளிப்பு வைபவ்மும் நடைபெற்றது.

இதற்கு தென் பகுதி கோர்ஸ்ப்பவர் போத்தல்கள் விநியோகஸ்தர் நாதன் கணினித் தொகுதிகளை சங்கத்தின் கணக்காளர் திருமதி த.செல்வராணியிடம் வைபவ ரீதியாகக் கையளித்தார். (04)

# அடியார்களுக்கு இலைக்கஞ்சி

(குருநகர்)

வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களம் நல்லூர் உற்சவ தினங்கள் 25 நாட்களிலும் இலைக்கஞ்சி கருப்பட்டியுடன் மற்றும் நன்நாரிப்பானம் என்பவற்றை அடியார்களுக்கு இலவசமாக வழங்கி வருகிறது.

யாழ்.மாநகர சபை வளாகத்தில் பருத்தித்துறை யாழ். வீதியில் அமைந்திருக்கும் நல்லூர், சித்த மருத்துவ நிலைய முன்றலில் தினமும் முற்பகல் 9 மணியளவில் இருந்து இச்சேவை நடைபெற்று வருகிறது. அடியார் களின் தாகத்தைத் தீர்க்கும் அதேவேளை, மருத்துவம் சார்நத நன்னாரிப்பானம், இலைக்கஞ்சி என்பன உடல் உபாதைகளுக்கும் மருந்தாக அமைவது சுட்டிக்காட்டப்படுகின்றது. (68)

# கணினி வன்பொருட்கள் பராமரிப்பு வேலைத்திட்டம்

(பருத்தித்துறை)

தேசிய மட்ட கணினி மென்பொருள் வலையமைப்பு சீர் திருத்தம் பராமரிப்பு வேலைத் திட்டத்தின் இவ்வருடத்துக்கான வேலைத்திட்டம் வடமராட்சி கல்வி வலயத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி நடத்துவதற்கு கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ் வேலைத் திட்டத்திற்கு முன்னோடியாக வடமராட்சி வலயப் பாடசாலைகளில் இயங்காத நிலையிலுள்ள PI, PII, PIII கணனிகள், Printer கள், UPS கள் போன்றவற்றின் எண்ணிக்கைகளினையும் அதிபர், பிரதி அதிபர், பாடசாலைக் கணினி நிலையப் பொறுப்பாசிரியர் ஆகியோரின் வதிவிட தொலைபேசி எண், கையடக்கத் தொலைபேசி எண் என்பவற் றையும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடிய தாக வலயத் தகவல் தொழில் நுட்ப இணைப் பாளருக்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் வலய மட்ட வன்பொருள் தீர்வு அணியினர் ஒவ்வொரு பாடசாலைகளுக்கு தரிசனம் செய்ய விரும்புவதால் அதற்கு முன்னர் தங்கள் கணினிகளை பரிசீலனை செய்வதற்கு ஏற்ற வகையில் இணைத்து வைத் திருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைவிட உத்தரவாதம் குறைவடைந்த பழுதடைந்த நிலையில் உள்ள T.I.V கணினிகள் இருப்பின் அது பற்றிய விபரங்களையும் அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (109)

கொஞ்ச நாளா இந்தச் செய்தியள் படங்கள் தான் பாக்கிற பேப்பரில எல்லாம் வந்திச்சு!

அதுதான் பாருங்க எங்கட ஈழத் தமிழ் கடைசி மன்னன் சங்கிலியின்ர சிலையைப் பற்றித் தான் சொல்லுறன்.

சங்கிலி மன்னனின் சிலை உடைக்கப்பட்டிட்டுது. அதை வேறை இடத்தைக் கொண்டே வைக்கப்போகினம் எண்டு முதல்ல செய்தி வந்துது.

பிறகு பாத்தா சங்கிலி மன்னன் முன்னையப்போல வீராவேசமாகக் காணப்படவில்லை. கையிலேந்திய வாளைக் கீழ் நோக்கிப் பிடித்துக்கொண்டு ஆரிடமோ சரணடையப் போறமாதிரி இருக்கெண்டு வதந்தியள் பரவிச்சு.

உப்புடி மக்களைப் போட்டுக்குளப்புறவைக்கு எத்தின புரளியளை அள்ளி விட்டுதுகள். நானும் முதல்ல நம்பித்தான் போட்டன்.

அதனாலதான் இண்டைக்கு விடியுது விடியுதெண்ண வெய்யிலுக்கு முன்னால போய் வந்திடுவமெண்டு முத்திரைச் சந்தையடிக்கு ஓடிப்போனன்.

அதில முந்திச் சந்தைதான் இருந்ததாம். சந்தியில்லைப் பாருங்கோ! அதெல்லாம் மாறீட்டுது. எனக்கு ஞாபகம் அந்தப் பகுதி மரங்கள் சூழ்ந்த ஒரு சோலையாக இருந்தது. அதில பெடியங்கள் பஸ்ராண்டும் நடத்தினாங்கள். பூங்காவும் வந்தது.

சரித்திர வரலாற்றில் நல்லூர் முருகன் கோவில் அந்தப் பகுதியிலதான் முதல் இருந்ததண்டும் படிச்சிருக்கிறன். அப்ப சங்கிலி மன்னன் அந்தக் கோவிலில்தான் வழிபாடுகள் நடத்தியதாகவும் எழுதியிருக்கினம்.

இராச வம்சத்தில் ரெண்டு சங்கிலியன் தோன்றி மறைஞ்சிருக்கினம். எண்டாலும் இந்த வீரச் சங்கிலியன் 1519 ஆம் ஆண்டிலிருந்து 1561 ஆம் ஆண்டுவரை யாழ். மற்றும் மன்னார் குடாநாட்டைக் கட்டி ஆண்ட பெரும் வீர புருஷராக சரித்திரம் சொல்லுது.


அதோட படிப்படியாக நாட்டைக் கட்டியாண்ட அரசர்களில் பரராசசேகரன் எண்ட அரசனுக்கு ஆசை நாயகியாக இருந்த பெண் பெத்தெடுத்தவன்தான் சங்கிலி மன்னன்.

அவன் பட்டம் சூட்டப்படாமலே தானே ஆட்சியைக் கைப்பற்றி ஆண்டு வந்தவனெண்டும்.

அவன்ர காலத்திலதான் போத்துக்கீசர் வந்து சேந்ததெண்டும் அவர்களுக்கு எதிராகப் போரிட்டு மூவாயிரத்து ஐந்நூறு பறங்கிப் படைகளைக் கொன்று குவித்து வெண்டானெண்டும் சரித்திரம் சொல்லுது.

அப்பிடிப்பட்ட வீரனை நேரடியா இல்லாட்டிலும் சிலையாண்டேன்ன நாங்கள் பாக்க வைச்ச அல்பிரட் துரையப்பா, சிற்பி சிவப்பிரகாசம், கைலாயப்பிள்ளையார் கோவில் காரர் மாநகர சபை முதல்வர், அமைச்சர் டக்ளஸ் எல்லோருக்கும் நன்றியுடையவர்களாக இருக்க வேணும் பாருங்கோ!

நல்லூரான் திருவிழாவும் துடங்கீட்டுது கோயிலுக்குப் போவியள்தான அப்ப ஒருககா அவன்ர சிலையைப் பாருங் கோவன் என்ன?



# வடமராட்சி வலய மட்டத்தின் சித்திரப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற வலய மட்ட சிறுவர் சித்திரப் போட்டி முடிவுகள் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு -

தரம் - 1

உ.மாதுமை (கரணவாய் வேதாரணியம் வத்தி), மு.அஸ்விகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), ம.டிலானி (குடத்தனை அ.மி.த.க பாடசாலை).

தரம் -2

வி.கிருஸ்ணபதி (கற்கோவளம் மெ.மி.த.), சு.வினுஜா (தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி), கி.துளசிகா (கரணவாய் மணியகாரதோட்டம் அ.த.க.பா).

தரம் - 3

சு.வனஜா (தம்பசிட்டி மெ.மி.த.க.பா), ம.சர்மிகா (கற்கோவளம் மெ.மி.த.பா), ஸ்ரீ.தர்சிகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

தரம் - 4

நா.கஸ்தூரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ச.ரெனோசன் (வல்வெட்டி இ.த.க.பா), யோ.துவாரகா (உடுத்துறை ம.வி).

தரம் - 5

பு.அர்ச்சயா (புலோலி சிவப்பிரகாசம் வித்தி), சி.சரணியா (உடுத்துறை ம.வி), லூ.அஜித்குமார் (பொலிகண்டி இ.த.க.பா). (109)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(07.08.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆடி 22 ஆம் நாள்.
இராகுகாலம்4.34–6.04, சுபநேரம் 9.04 –10.34,
நட்சத்திரம்: விசாகம் மு.இ 7.59 வரை
திதி: அட்டமி காலை 7.14,
நவமி பி. இ 5.09 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– அநீதியிழைத்தல், பணக் கஷ்டம், தேக நலம் பாதிப்பு, குடும்பத்தில் குழப்பம், திடீர் விபத்து.

ரிஷபம:– பணக் கஷ்டம், சபலபுத்தி, தேகம் சுகக் குறைவு, மருத்துவச் செலவு, வீண் அலைச்சல்.

மிதுனம் :– பெரியோர் பாராட்டு, பண வரவு, தேக ஆரோக்கியம், தானதர்ம சிந்தனை, நண்பர் வருகை.

கடகம்:– கடன் வாங்குதல், பணக் கஷ்டம், உடல்நலம் பாதிப்பு, மருத்துவச் செலவு, மனக் கவலை.

சிம்மம்:– வீண் அலைச்சல், பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், மனச் சஞ்சலம், ஆத்திரப்படல்.

கனனி :– அதிகாரப் போட்டி, நினைத் ததைச் சாதித்தல், பண வரவு, குடும் பத்தில் மகிழ்ச்சி, சகோதர உதவி.

துலாம் :– சகோதர வெறுப்பு, சில முக்கிய முடிவுகள், அதிகாரப் போட்டி, குடும்பத்தில் குழப்பநிலை, விபத்து.

விருச்சிகம்:– வெளிநாட்டு உதவி, பணவரவு, சகோதர உதவி, குடும்பத்தில் மகிழ்ச்சி, உடல் உபாதை.

தனுசு:– தொழிலில் ஆதாயம், பண வரவு, திருமணப் பேச்சு, வசதி குறைவு, நண்பர் விமர்சனம்.

மகரம:– மனகக்கவலை, பணக் கஷ்டம், வாய்ப்பு பறிபோதல், அதிகாரிகள் கோபம்,உடல் உபாதை.

கும்பம் :– சுற்றத்தார் ஆதரவு, பண வரவு, குடும்பத்தில் குதூகலம், திருமணப் பேச்சு, வசதிக் குறைவு.

மீனம்:– வசதிக் குறைவு, பணக் கஷ்டம், அதிகாரிகள் கவலை, புதுப் பொருள் சேர்க்கை, திடீர்ப் பயணம்.

# சென்றலின் முக்கோணத் தொடர் இன்று ஆரம்பம்










(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடாத்தும் முக்கிய ஒரு நாள் போட்டி இன்று மிகவும் கோலாகலமாக சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திய யாழ். நகரின் சிறந்த கிரிக்கெட் அணியைத் தெரிவு செய்யும் நிகழ்வில் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளே இம் முக்கோணத் தொடரில் பங்குபற்றுகின்றன.

இதில் யாழ். பல்கலைக்கழகம், ஜொலிஸ்ரார், யாழ். சென்றல் அணிகள் புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்று இத்தொடரில் பங்குபற்றும் தகுதியைப் பெற்றன.

இன்று காலை 8.45 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து போட்டிகள் நடைபெறும். ஆரம்ப நிகழ்வில் மூன்று அணிகளையும், வடமாகாணப் பிராந்திய வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ்.எம். றஜீவனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து முதலாவது போட்டி நடைபெறும்.

இப்போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தொடர் யாழ். மண்ணில் முதல் முறையாக நடைபெறவுள்ளது.



**தேசிய ரீதியில் சிறந்த ஐந்து பாடசாலை கிரிக்கெட் அணிகளைத் தெரிவு செய்து நேற்று முன்தினம் விருது வழங்கப்பட்டது. சண்டே ரைம்ஸ் மற்றும் பாட்டா நிறுவனங்களினால் வழங்கப்பட்ட இந்த விருது வழங்கும் நிகழ்வு சிறிமாவோ பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வடமாகாணத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி சிறந்த அணியாகத் தெரிவு செய்யப்பட்டது. விருதுடன் மத்திய கல்லூரி அணியினர் நிற்பதைக் காணலாம். இதன் விபரம் அண்மையில் சண்டே ரைம்ஸ் மற்றும் பாட்டா நிறுவனங்களினால் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.**

# தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தேசிய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் தெரிவுக்கான பரீட்சையில் தோற்றவுள்ளோருக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும், இலங்கை கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கமும் இணைந்து தேசிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையினை எதிர்வரும் 01-09-2011ஆம் திகதியும், செய்முறைப் பரீட்சையினை 02-09-2011ஆம் திகதியும் நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்கான பயிற்சி வகுப்புகள் இலங்கை தேசிய மத்தஸ்தர்களினால் எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களைக் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அதே இடங்களில் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ந. சுதேஸ்குமார் (47, அராலி வீதி, சங்கானை, சங்கானை மக்கள் வங்கிக்கு அருகாமையாடலா அலலது டீக. மடீனாகரன் (182/2, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், அப்பலோ கண் வைத்திய சாலைக்கு முன்பாகவோ அல்லது எஸ் அப்புத்துரை (நீர்வேலி வடக்கு, நீர்வேலியிலோ அல்லது ஏ. குமாரசிவம் (சந்தை ஒழுங்கை ஆவரங்கால், மத்திய விளையாட்டுக் கழகம் ஆவரங்காலிலோ தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலய மட்டப் போட்டிக்குத் தெரிவான வலி வடக்கு முன்பள்ளிகளின் விபரம்

(மல்லாகம்)

வலி. வடக்கு முன்பள்ளிச் சிறார்களின் குடும்ப விளையாட்டு விழா பிரதேச மட்டப் போட்டிகள் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வலி வடக்கு முன்பள்ளிகளின் ஆசிரிய சங்கத் தலைவி திருமதி கு. சசி தலைமையில் பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி முகாமையாளர் எஸ். விக்கினராஜா பிரதம விருந்தினராகவும், இலங்கை வங்கியின் மல்லாகக் கிளை முகாமையாளர் சி. செந்திநாதன், மக்கள் வங்கியின் காங்கேசன்துறை கிளையின் முகாமையாளர் திருமதி பு. தியாகராசா, வலிகாமக் கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. குகனேசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

இந்தப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்று வலிகாமம் வலய மட்டப் போட்டிக்குத் தெரிவான முன்பள்ளிகளின் விபரம் வருமாறு:

கதிரைச் சவாரி:
கும்பிளாவளை முன்பள்ளி, அளவெட்டி,
பிராணி அஞ்சல்:
முதலியார் முன்பள்ளி, அளவெட்டி.
சமனிலை நடை:
மாதர் அபிவிருத்தி முன்பள்ளி, மல்லாகம்.
நுங்குச் சவாரி:
பாரதி முன்பள்ளி, தெல்லிப்பளை.
பந்துப் பரிமாற்றம்:
ஈஸ்வரன் முன்பள்ளி, அளவெட்டி.
கயிறு இழுத்தல்:
கலைமகள் முன்பள்ளி, மல்லாகம்.
பழம் பொறுக்கல், வைத்தல்:
கும்பிளாவளை முன்பள்ளி, அளவெட்டி.
கோபுரம் அடுக்குதல்:
வித்தியோதயா முன்பள்ளி, மல்லாகம்.
உணவு சேகரிப்பு:
பாரதி முன்பள்ளி, தெல்லிப்பளை.
பலூன் பாதுகாப்பு:
ஈஸ்வரன் , அளவெட்டி, தெல்லிப்பளை, மல்லாகம் குடும்பங்கள்.

இதேவேளை, இந்தப் பிரதேச மட்டப் போட்டிகளில் வெற்றிபெற்று வலிகாமம் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள மேற்படி முன்பள்ளிகளுக்கான போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றவுள்ளது.

இதில் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை பிரிவுகளைச் சேர்ந்த வெற்றிபெற்ற முன்பள்ளிகள் கலந்துகொள்ளவுள்ளன.

# ஒரு நாள் அணியில் மீண்டும் ராவிட்

(மும்பை)

இங்கிலாந்துக்கு எதிரான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கு ராகுல் ராவிட் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளார்.

ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங் அணியில் காயம் காரணமாக இடம்பெறவில்லை. சகீர்கான் 16 வீரர்கள் கொண்ட அணியில் இடம்பெற்றுள்ளார். சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ராகுல் டிராவிட் மீண்டும் ஒரு நாள் அணியில் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு சம்பியன்ஸ் ஒருநாள் தொடருக்கு இந்திய அணியில் விளையாடிய ராகுல் ராவிட் அப்போது 6 போட்டிகளில் மட்டுமே இடம்பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அணி விவரம்: டோனி (தலைவர்), சச்சின் டெண்டுல்கர், கௌதம் கம்பீர், விரேந்தர் சேவாக், ராகுல் ராவிட், ரெய்னா, விராத் ஹோலி, ரோஹித் சர்மா, பார்த்தீவ் பட்டேல், அமித் மிஸ்ரா, ஆர்.அஷ்வின், சகீர்கான், இஷாந்த் சர்மா, பிரவீண் குமார், முனாப் பட்டேல், வினய் குமார்.

# வருடாந்த விளையாட்டு விழா



(கிளிநொச்சி)

கிளிநொச்சி அம்பாள்குளம் அம்பாள் முன்பள்ளியில் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.

இதில் ஓட்டப் போட்டிகள், சங்கீதக் கதிரை, பழம் பொறுக்குதல் என வண்ணமயமான போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளில் சிறார்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் பார்வையாளர்களைக் கவரும் வகையிலும் அமைந்தது.

கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் கிருஸ்ணசாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், கிராம அலுவலர் ஜோன் பப்பிஸ் அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலய அதிபர் திருமதி மாணிக்கவாசகம் ஆசிரியர்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றோர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

□□□

(யாழ். நிருபர்)

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரீ கணேசா முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய முன்பள்ளித் தலைவர் ச.க. முருகையா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலி கிழக்கு பிரதேச சபைச் செயலர் திருமதி ஜெயந்தாசோமராஜ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச. லலீசன், அதிபர்களான இ. குணநாதன், இ. பசுபதீஸ்வரன், இ. தர்மரத்தினம், ச. வேலழகன், கு. வாகீசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (10)

# ஆயிரம் விக்கெட் என்ற கனவை காயமும் வயதும் தகர்த்துவிட்டது

(லண்டன்)



டெஸ்டில் 1,000 விக்கெட்டுக்களை எடுக்க வேண்டும் என்ற ஆசை தனக்கு இருந்தது எனவும்.. ஆனால் காயங்களும், வயதானது போன்ற உணர்வும் ஓய்வு குறித்து தன்னைச் சிந்திக்க வைத்ததாக முரளிதரன் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில் காலியில் பிரக்யான் ஓஜா விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் முரளிதரன் 800 டெஸ்ட் விக்கெட்டுக்கள் என்ற உலக சாதனை புரிந்தார் அத்துடன் ஓய்வும் பெற்றார். 1000 டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தும் முதல் மனிதனாக இருக்கும் ஆசை என்னிடம் இருந்தது, இந்திய அணிக்கு எதிராக 8 விக்கெட்டுகளை எடுத்து 800 விக்கெட்டுக்கள் மைல்கல்லை எட்டிய பிறகு ஓய்வு பெற்றேன், இருந்தாலும் ஆயிரம் விக்கெட்டுகள் வரை டெஸ்ட் ஆடியிருக்கலாமோ என்ற சபலம் எனக்கு இருந்தது. அதாவது 1000 விக்கெட்டுக்களை கைப்பற்றுவது சாத்தியமா அல்லது 800 விக்கெட்டுகளுடன் ஓய்வு பெறுவது சிறந்ததா என்றெல்லாம் எனது மனம் தடுமாறியது என்று விஸ்டன் கிரிக்கட்டர் இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி ஆண்டொன்றுக்கு 8 டெஸ்ட் போட்டிகளை மட்டுமே விளையாடுகிறது. எனவே நான் 1000 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற இப்போது நான் விக்கெட்டுக்களை வீழ்த்தும் சராசரியை வைத்துப் பார்க்கும்போது எனது 43 வது வயதில் தான் 1000 விக்கெட்டுக்கள் சாத்தியம் என்று தெரிந்தது. அது வரையில் அணியில் என்னை வைத்திருங்கள் என்று நிர்பந்திப்பது கொஞ்சம் அதிகபட்சம் தான். அதன் பிறகு எனது உடம்பு கூறியதைக் கேட்டு ஓய்வு அறிவிக்க முடிவெடுத்தேன். அடுத்த ஆண்டு ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கட் மட்டுமல்லாது அனைத்து வகை கிரிக்கட்டிலிருந்தும் தான் ஓய்வு பெறப்போவதாக முரளிதரன் தெரிவித்தார்

# பந்து வீச்சில் அச்சத்தைக் கொடுத்து தூக்கத்தைக் கெடுத்தவர் முரளிதரன்

(லண்டன்)

என்னுடைய கிரிக்கட் வாழ்க்கையில், பந்துவீச்சில் அச்சத்தை கொடுக்கும் ஒரே வீரர் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன். இவரால் என்னுடைய தூக்கத்தை நிறைய நாள் இழந்துள்ளேன். இவருடைய பந்துவீச்சுத் திறமை உண்மையிலேயே அபாரமானது என இந்திய வீரர் ராகுல் டிராவிட் பெருந்தன்மையுடன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டிராவிட் கூறியது, அனைவரும் அழைப்பது போன்று பெருஞ்சுவராக என்னை ஒருபோதும் கருதவில்லை. தற்போது, ஒரு சில அனுபவ வீரர்கள் ருவென்ரி 20 போட்டியில் செயல்படுவது போன்று, அதிரடி ஆட்டத்தை கொடுக்க முயற்சிக்கின்றனர். இது டெஸ்ட் போட்டிக்கு உகந்தது அல்ல.

ஒரு நாள், ருவென்ரி 20, டெஸ்ட் போட்டி என எந்த வகையான போட்டியாக இருந்தாலும் அதனைச் சவாலாக எடுத்துக் கொண்டு செயல்பட்டால் சாதிக்கலாம். இது போன்று வெவ்வேறு வடிவத் திலான போட்டிகள் வீரர்களைப் பாதிக்காது. டெஸ்ட் போட்டிக்களுக்கு ரசிகர்கள் மத்தியிலான ஆர்வம் குறைந்து கொண்டே வருகிறது என்ற கருத்தை என்னால் ஏற்க முடியாது. டெஸ்ட் போட்டி நீண்ட நேரம் நடப்பதால், அனைவரும் தங் களுடைய வேலையினை விட்டு விட்டு வந்து கிரிக்கட் பார்க்க வரமாட்டார்கள். ஆனால் நான் கிரிக்கட்டில் நுழைந்த போதெல்லாம் வீரர்கள் பெரிய அளவில் வளர்ச்சி பெறுவதற்கு வாய்ப்பு இல்லை. தற்போதுள்ள இளம் வீரர்கள் வளர்வதற்கு நிறைய வழிகள் உள்ளன. என்னை இந்திய அணியின் பெருஞ்சுவர் என வர்ணிக்கின்றனர். நான் அவ்வாறு நினைக்கவில்லை.

ருவென்ரி 20 போட்டிகள் மட்டும் சரியான வழி என்று நான் சொல்லவில்லை. மூன்று வகையான போட்டிகளிலும் விளையாட வேண்டும் என்று முடிவு எடுப்பது தான் சரியான முடிவு என நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# மாரடைப்பால் மரணம்

(டோக்கியோ)

ஜப்பான் கால்பந்து அணி முன்னாள் நட்சத்திர வீரர் நவோகி மட்சுடா (34) மாரடைப்புக் காரணமாக காலமானார்.

இவர் மட்சுமோட்டோ நகரில் இரு தினங்களுக்கு முன் பயிற்சி செய்து கொண்டிருந்தபோது திடீரென மாரடைப்பு ஏற்பட்டதால் களத்திலேயே மயங்கி விழுந்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர், நினைவு திரும்பாத நிலையில் நேற்று முன் தினம் காலமானார்.

இவரின் இழப்பு ஜப்பான் கால்பந்தாட்டத்திற்கு பெரிய இழப்பு என்று ஜப்பான் கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இவரின் இழப்புக் குறித்து முன்னாள் வீரர்கள் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

# இங்கிலாந்து அணியிலிருந்து ஜொனதன் ரொட் நீக்கப்பட்டார்

(லண்டன்)



இந்தியாவிற்கு எதிராக எதிர் வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்கவுள்ள இங்கிலாந்து அணியிலிருந்து காயம் காரணமாக ஜொனதன் ரொட் நீக்கப்பட்டுள்ளார்.

ரிறின் பிறிட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பந்தொன்றை பாய்ந்து பிடித்த வேளை இடது தோற்பட்டையில் இவர் காயமடைந்தார். இவரது காயம் குணமடையாத நிலையில் மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான அணியிலிருந்து இவர் நீக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக ரவி போபரா அணியில் இணைததுக்கொள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, இங்கிலாந்து அணியின் மற்றொரு வீரரான கிறிஸ் ரெம்லெட்டும் காயமடைந்துள்ளார். எனினும் அவரது பெயர் அணியில் 13ஆவது வீரராக சேர்க்கப்பட்டுள்ளது.

இதன்படி மூன்றாவது போட்டியில் விளையாடவுள்ள இங்கிலாந்து அணி விபரம் வருமாறு: அன்ட்ரூ ஸ்ரோஸ் (அணித் தலைவர்), ஜிம்மி அண்டர்சன், இயன் பெல், ரவி போபரா, ரிம் பிறிஸ்னன், ஸ்ருவட் புரோட், அலிஸ்ரர் குக், ஸ்ரீவன் பின், இயன் மோர்கன், கெவின் பீற்றர்சன், மட் பிறியர், ஸ்வான், கிறிஸ் ரெம்லெட்.

# ஒலிம்பிக் சம்பியன் வோர்னா விலகல்

தென் கொரியாவில் உள்ள தீடு நகரில் நடைபெறும் உலகத் தடகளப் போட்டியில் இருந்து ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனான ஜெரிமி வோர்னா விலகியுள்ளார்.

400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் முன்னாள் ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனாக இவர் திகழ்கின்றார்.

இந்த 27 வயது வீரர் 400 மீற்றர் தடகள வரலாற்றில் 3ஆவது அதிவேக ஓட்ட வீரர் என்ற பெருமை பெற்றவர். இவர் கடந்த ஜுலை மாதம் பயிற்சி பெற்றபோது இடது கால் விரலில் கடுமையான காயம் ஏற்பட்டது. இந்த வாரம் இந்தக் காயத்தை பெரிதாக உணர்ந்த நிலையில் வோரினர் தென் கொரிய உலகத் தடகளப் போட்டியில் பங்கேற்கப் போவதில்லை என தெரிவித்துள்ளார்.

இவரின் விலகல் அடுத்த நிலை வீரர்களுக்குச் சாதகமாக அமையும் என விளையாட்டு ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

# தென்கொரிய அணியை வீழ்த்தியது ஆர்ஜென்ரீனா



(போகோடா)

தென்கொரிய அணிக்கெதிரான கால்பந்தாட்டப் போட்டியில் ஆர்ஜென்ரீன அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிபெற்றது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வரும் 20 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான சர்வதேச கால்பந்தாட்டத் தொடரிலேயே ஆர்ஜென்ரீன அணி வெற்றிபெற்றது.

கொலம்பியாவில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் தென்கொரிய, ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின.

இதில் ஆரம்பம் முதலே அபாரமான தாக்குதல் ஆட்டத்தையும், சிறந்த ஒருங்கிணைந்த ஆட்டத்தையும் ஆர்ஜென்ரீனா அணி வெளிப்படுத்தியது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா அணி வெற்றிபெற்றது.

வெற்றியின் பின்னர் ஆர்ஜென்ரீனா அணித் தலைவர் குறிப்பிடுகையில், தென்கொரிய அணி திறமை வாய்ந்த அணி. அதனை நாம் வெற்றி கொண்டது. மகிழ்ச்சி அளிக்கிறது.

தொடர்ந்து வரும் போட்டிகளில் வெற்றிபெற்று அடுத்த சுற்று ஆட்டங்களுக்கு முன்னேறுவதே எமது முதல் கட்ட இலக்காகும். அதனைத் தொடர்ந்து அரையிறுதி, இறுதிப் போட்டி பற்றிச் சிந்திப்போம். முதலில் அடுத்த சுற்றில் வெல்வதையே இலக்குவைத்துள்ளோம்.

இந்த வெற்றிக்கு எமது அணியின் ஒருங்கிணைந்த ஆட்டமே முக்கிய காரணம் எனத் தெரிவித்தார்.

# 1ஆவது ஆசிய ஹொக்கிப் போட்டி அடுத்த மாதம் சீனாவில் ஆரம்பம்

(பீஜிங்)

ஆண்களுக்கான முதலாவது ஆசிய சம்பியன் கிண்ண ஹொக்கிப் போட்டி சீனாவின் ஓர்டோசில் அடுத்த மாதம் மூன்றாம் திகதி முதல் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், ஜப்பான், கொரியா, மலேசியா, சீனா உள்ளிட்ட ஆறு அணிகள் பங்குபற்றுகின்றன.

இதே போல் பெண்களுக்கான 2ஆவது ஆசிய சாம்பியன் கிண்ணப் போட்டியும் சீனாவில் நடைபெறவுள்ளது.

பெண்கள் பிரிவில் மொத்தம் 4 அணிகள் கலந்து கொள்கின்றன. ஜப்பான், சீனா, கொரியா மற்றும் இந்திய அணிகள் மோதவுள்ளன.

# காயங்களை மறைக்கக்கூடாது

(புதுடில்லி)



காயங்களை இந்தியக் கிரிக்கட் வீரர்கள் மறைக்கக்கூடாது என இர்பான் பதான் தெரிவித்தார்.

விளையாட்டு வீரர்களுக்கு காயத்தை தவிர்க்க முடியாது. பெங்களூரில் தேசிய கிரிக்கட் அக்கடமி உள்ளது. அங்கு போட்டி இல்லாத தருணத்தில் வீரர்கள் காயம் குறித்து ஆலோசனை பெறலாம். என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. ஆனால், அந்த அக்கடமியில் போட்டி இல்லாத காலத்தில் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள் இருப்பது இல்லை என இர்பான் பதான் தெரிவித்தார்.

வீரர்கள் தனிப்பட்ட முறையில் காயம் ஏற்படாத வகையில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இங்கிலாந்தில் ஒரு நாள் போட்டிகளை விட டெஸ்ட் போட்டிகளில் ஆடுகளம் உதவியாக இருக்கும்.

அணியில் இடம்கிடைக்கும் வகையில் உள்ளூர்ப் போட்டிகளில் சாதிக்க வேண்டும். அவ்வாறு சாதிக்கும் முயற்சியில் கடுமையாக ஈடுபட்டு வருகின்றேன். மீண்டும் இந்திய அணியில் இடம் பிடிப்பதே எனது இலக்கு என்றும் இர்பான் பாதன் தெரிவித்தார்.

# புலிகளை தடைசெய்யும் கோரிக்கை வரவேற்கத்தக்க ஒன்றாகும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை தடை செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை வரவேற்கத்தக்கது என ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரிவன்த ஆரிய சிங்க தெரிவித்துள்ளார்.

காலத்திற்குப் பொருத்தமான வகையில் இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது

2009ம் ஆண்டு புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்ட போதிலும், ஐரோப்பிய நாடுகளில் ஒரு சில புலி உறுப்பினர்களே இது வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்ட 37பேர் கைது செய்யப்பட்டனர். இதில் 21 பேர் ஏற்கனவே தண்டிக்கப்பட்டுள்ளனர்.



விடுதலைப் புலி அமைப்புத் தொடர்பில் விழிப்புடன் செயற்படுமாறு உலக நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டை புலிகளின் ஆதரவாளர்கள் சுமத்துகின்றனர்

## ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவர் கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் எதிர்காலப் பயணத்தை தடுக்கும் நோக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவான குழுக்கள் தூதரக அதிகாரிகளை இலக்காகக்கொண்டு பல்வேறு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவர் ரி.பி.மடுவேகெதர தெரிவித்தார்.

பேர்லினில் உதவித் தூதுவராக கடமையாற்றும் ஜகத் டயஸுக்கு எதிராக இரண்டு மனித உரிமை அமைப்புக்கள் சுவிஸ் சட்டமாஅதிபரிடம் அண்மையில் யுத்தக் குற்றச்சாட்டு அடங்கிய முறைப்பாட்டினை தாக்கல் செய்யதிருந்தனர்.

வெளிநாட்டு உதவித் தூதுவராகக் கடமையாற்றுகின்ற மேஜர் ஜெனரல் ஜகத் டயஸை இலக்காக் கொண்டு விடுதலைப் புலி இயக்க ஆதரவாளர்கள் இத்தகைய சூழ்ச்சிகளில் ஈடுக்கின்றனர். ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைச் சாத்தியம் எதுவுமின்றி ஏதேனும் அமைப்பொன்றினால் இராஜதந்திர அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியாது என அவர்மேலும் தெரிவித்தார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் நிலவும் விசாரணை அதிகாரிகளுக்கான பற்றாக்குறையால் முறைப்பாடுகளை விசாரிப்பதில் சிரமங்கள் ஏற்படுவதாக அதன் தலைவரும் முன்னாள் நீதியரசருமான கே.பாலபட்டபெந்தி தெரிவித்துள்ளார்.

நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விசாரணை அதிகாரிகளை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர் ஆகிய பதவி வெற்றிடங்களையும் விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் மேலும் கூறினார்

# தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசும்,கூட்டமைப்பும் நாடகமாடுகின்றன

## ஜே.வி.பி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)


தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரசும் கூட்டமைப்பும் சேர்ந்து நாடகமாடுகின்றன. எனவே, தமிழ் மக்கள்,சுயமாக போராடியே சுதந்திரத்தையும் அரசியல் உரிமைகளையும் வென்றெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் மீண்டும் தள்ளப்பட்டுள்ளார்கள். என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிததுள்ளார்.

தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பகிர்வை வழங்க அரசாங்கம் இந்தியாவிற்கும் ஏனைய் சர்வதேச நாடுகளுக்கும் ஏற்கனவே உறுதிமொழி அளித்துவிட்டது. ஆனால் அதனை நிறைவேற்றாது ஒட்டுமொத்த உலகத்தையும் அரசாங்கம் ஏமாற்றி வருகின்றது.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் முடிந்துவிட்ட நிலையில் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கடந்த தேர்தல்களிலும் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகக் கூறி வந்தது. அது மட்டுமன்றி இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளிடமும் உறுதி மொழிகளை அளித்தது.

ஆனால் தற்போது கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தீர்வு விடயத்தில் இழுபறி நிலையை ஏற்படுத்தி அனைவரையும் அரசாங்கம் ஏமாற்றிவருகின்றது. தற்போதைய அரசாங்கத்தினால் சிங்கள மக்களுக்கே ஒன்றும் கிடைக்காத போது தமிழ் மக்களுக்குத் தீர்வுத் திட்டமோ ஜனநாயகமோ கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது.ஏனென்றால் தற்போதைய அரசு ஒரு போதும் நல்லாட்சியை விரும்புவதில்லை. உறுதி மொழிகளையும் நிறைவேற்றப்போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் ஸ்திரத் தன்மைக்காகவே அரசுடன்



பேச்சுவார்த்தைகளுக்கு சென்று தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர். 13 ஆவது திருத்தச் சட்டம் அதிகாரப் பகிர்வு போன்றவற்றைப் பெற்றுக் கொண்டு தமிழ் மக்களை மீண்டும் அடிமைகளாக்கவே கூட்டமைப்பினரும் முயற்சிகளை மேற்கொள்கின்றனர்.

கடந்த 30 ஆண்டு காலமாக உள்நாட்டு யுத்தத்தினால் வடக்கு, கிழக்கு மக்கள் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்டிருந்தனர். யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ முடியும் என்று நம்பிய போதிலும் அதிலும் ஏமாற்றமடைந்துள்ளனர். இராணுவக் கட்டுப்பாட்டிற்குள் வாழவேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது என்றார்.

# ஜேர்மனில் தமிழ் மாணவி கட்டுரை போட்டியில் முதலிடம்

(கொழும்பு)

ஜேர்மனியில் அண்மையில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியொன்றில் முதலிடத்தைப் பெற்று அதி திறமையுள்ள மாணவியாக ஈழத்தமிழ் மாணவியான செல்வி சரிகா சிவநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஜேர்மனியின் வேல்பெனின் மாநிலத்தில் பொன் நகரத்தில் தனது பெற்றோருடன் வசிக்கும் இவர் அண்மையில் ஜேர்மன் மாணவர்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியொன்றில் முதல்ப் பரிசைப் பெற்று சிறந்த திறமையுள்ள மாணவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



இவரைப் பாராட்டும் முகமாக பொன் நகர மேயர் மாறியோலோ தமது நகரத்தின அதிதிறமையுள்ள மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்து பாராட்டுக் கேடயமும் வழங்கிக் கௌரவித்தார்.

# அனைத்து மக்களும் ஏற்கும் தீர்வையே அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானம்

## கூட்டமைப்பிடம், அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், முழு இலங்கைக்கும் பொருத்தமானதும், சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்மானம் ஒனறுக்கு இணங்குவதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும் என அமைச்சர் நிமால்



சிறிபால டி சில்வா, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அறிவித்துள்ளார். அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த நான்காம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றின் ஊடாக அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களைப் பெற்று, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமன்றி, தென் பகுதிக்கும் அமுல்ப்படுத்தப்படும் வகையில், சகல இனங்களின் அடையாளங்களையும் பாதுகாத்து, தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் படியான அரசியற் தீர்வொன்றுக்குச் செல்ல வேண்டும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

அப்படியான தீர்வுத் திட்டமானது இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்துவதாக இருக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு அணுசக்தி தொழில்நுட்ப உதவிகளை வழங்க முடியாதென அமெரிக்கா அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு அணுசக்தி தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளதாக அரசாங்கம் வெளியிட்டுள்ள தகவலை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இலங்கைக்கு அணுசக்தி தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் எத்தகைய உடன்பாட்டிலும் அமெரிக்கா கையெழுத்திடவில்லை என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

குடியியல் செயற்பாடுகளுக்கான அணுசக்தி மற்றும் ஏனைய கதிரியக்கம் தொடர்பான தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்காவிடம் இருந்து இலங்கை பெற்றுக் கொள்ளவுள்ளதாக இலங்கையின் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

அணுசக்தியின் மூலம் சக்தியைப் பெறுவது மிகவும் மலிவானதாக இருந்த போதும், அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியின் பின்னர் இது விவாதத்துக்குரிய விடயமாகியுள்ளதாகவும் அவர் கூறியிருந்தார்.

எனினும் இதுபற்றிய கலந்துரையாடலுக்கான கதவுகளை தாம் திறந்தே வைத்திருப்பதாகவும், இதுதொடர்பாக உடன்பாட்டுக்கு வரமுன்னர் ஆழமாகக் கலந்துரையாடப்படும் என்றும் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அமெரிக்காவும் இலங்கையும் அணுசக்தி தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பான எந்தவொரு கலந்துரையாடலையும் நடத்தவில்லை என்று கூறியுள்ளது.

இலங்கைக்கு அணுசக்தி தொழில்நுட்ப உதவிகள் எதையும் வழங்கும் திட்டம் அமெரிக்காவுக்கு இல்லை என்றும், ஆபத்தான கதிரியக்கப் பொருட்களைப் பாதுகாப்பாக அப்புறப்படுத்துவதற்கு அமெரிக்கா உதவலாம் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நீண்டகாலம் பயன்பாட்டில் இல்லாத இரண்டு கதிரியக்க ஆதாரங்களை அகற்ற உதவுமாறு இலங்கை அரசாங்கம் அமெரிக்காவை அணுகியது.

அதற்கு அமெரிக்கா உதவ முன்வந்தது. இது ஆபத்தான கதிரியக்கப் பொருட்களை அப்புறப்படுத்தும் உலகளாவிய திட்டத்தின் ஒரு பகுதியே என்றும் அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

இந்த தொழில்நுட்ப உதவி பற்றி அமெரிக்கத் துதரகமும் இலங்கை அரசாங்கமும் கலந்துரையாடிய போதும், எந்தவொரு உடன்பாடும் கையெழுதிடப்படவில்லை என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது

# அபிவிருத்தியை குழப்பவேண்டாம் கூட்டமைப்பிடம் பசில் கோரிக்கை



(கொழும்பு)

நீண்டகாலத்திற்கு பின்பு வடபகுதி மக்கள் சுதந்திரமாக செயற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள அமைதியையும் அபிவிருத்தி செயற்பாடுகளையும் குழப்ப வேண்டாம் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

வவுனியா விவசாயப் பண்ணையில் நடைபெற்றுவரும் தேசிய விவசாயிகள் வாரத்தின் இறுதிநாள் வைபவம் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து உரையாற்றும்போதே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் வடபகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கும் போது ஒரு போத்தல் தண்ணீர் கூட வழங்கமுடியாத இவர்கள் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து இப்போது பேசுவது வேடிக்கையாகவுள்ளது.

அரசாங்கம் எந்தவொரு இனத்திற்கும் வேற்றுமை காட்டவில்லை.சகலருடைய தேவைகளையும் நிறைவேற்றிவருகின்றது. விவசாயத்துறையில் நாங்கள் பலவித முன்னேற்றங்களை அடையவேண்டும். சுதந்திரத்திற்கு முன்னர் நாம் விவசாயத்துறையில் முன்னேற்றம் அடைந்திருந்தோம்.

சுயபூர்த்தி இருந்தது. எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள் வெளியேறும் போது வளங்களை சுரண்டிக் கொண்டு போனார்கள்.

இதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளபட்ட போது நாட்டில் பயங்கரவாதம் ஆரம்பித்தது. இப்போது பயங்கரவாதம் முழுமையாக முறியடிக்கப்பட்டுவிட்டது.

வடபகுதியின் பல இடங்களில் விவசாய முன்னேற்றத்திற்கு வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். பரந்தன், நெல் ஆராய்ச்சி நிலையம், அச்சுவேலி கைத்தொழில் பேட்டைகளை விரைவில் இயங்க வைக்கவுள்ளோம்.

ஜனாதிபதி உயிரை பணயம் வைத்து பயங்கரவாதத்தினை முறியடித்து அமைதியை ஏற்படுத்தியவர். அமைதி, சுமுக நிலையை குழப்ப எடுக்கப்படும் எந்த முயற்சிக்கும் இடமளிக்க மாட்டாது.

மக்கள் சுதந்திரமாக நடமாடும் சூழல் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது என்றார்.

# புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய கல்விச் சுற்றுலாவுக்கு நிதியுதவி

(கொழும்பு)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய மாணவர்களின் கல்விச் சுற்றுலாவுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நிதியுதவி வழங்கியுள்ளார்.

தீவகத்திலுள்ள புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய கல்விச்சமூகம் அமைச்சரிடம் கல்விச் சுற்றுலா தொடர்பாக ஏற்கனவே கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது.

இந்த நிலையில் இரண்டாம் தவணை விடுமுறை நாளான்று பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் தென்னிலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர்.

இதன்பொருட்டு அமைச்சரின் யாழ்.அலுவலகத்திற்கு வருகை தந்த பாடசாலை சமூகத்தினரை வரவேற்ற அமைச்சர்,மகேஸ்வரி நிதியத்தின் ஊடக கல்விச் சுற்றுலாவுக்கான நிதியுதவிகளை பாடசாலை அதிபர் நாகராசாவிடம் கையளித்தார்.

# வாழ்க்கையை கட்டியெழுப்ப உழைக்கும் கடும் முயற்சியாளர்கள் யாழ்.விவசாயிகள்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த பாராட்டு

(வவுனியா)

யாழ்ப்பாண விவசாயிகள் தமது வாழ்க்கையை மேலும் கட்டி எழுப்ப கடும் முயற்சியாளர்களாக உழைக்கின்றார்கள் தென்பகுதி மரக்கறியான பீற்றூட் செய்கையிலும் அவர்கள் வெற்றிகண்டுள்ளனர் என பெண்கள் விவகாரம், சிறுவர் பாதுகாப்பு அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நடைபெறும் தேசிய விவசாயிகள் விழாவின் 4ஆம் நாள் வைபவத்தினை கடந்த வியாழன் மாலை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது,

நீண்டகாலம் யுத்தப் பிரதேசத்தில் வசித்த இந்தப் பிரதேச மக்களும் நாட்டின் ஏனைய மக்களும் ஏதோ ஒரு விதத்தில் அச்சத்துடனும் பீதியுடனும் வாழ்ந்த காலங்கள் உள்ளது ஆனால் யாருமே நினைக்கமுடியாத வகையில் எம்மீது பிரயோகிக்கப்பட்ட அனைத்து அழுத்தங்களும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சமீபத்தில் நான் யாழ்ப்பாணத்தில் அரசியல் நடவடிக்கைகளுக்கு சென்றபோது மீண்டும் ஒரு தடவை தமிழ் மக்கள் மத்தியில் செல்வதற்கு வாய்ப்பும் எமது எண்ணங்களை பரிமாறிக் கொள்ள சந்தர்ப்பமும் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். யாழ்ப்பாண மக்கள் வேறு இன மக்கள் மீது வெறுப்புக் கொண்டவர்கள் அல்லர் என்பதனை அவர்களுடன் பழகிய போது என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்களே பொது மக்களுடைய மனங்களை விகாரமடையச் செய்திருந்தனர்.

பாடசாலை மாணவர்களுடைய கல்விச் செயற்பாட்டுக்கு முக்கிய தளமாகக் கண்காட்சித்திடல் அமைந்திருக்கும் என நம்புகின்றேன். எமது நாட்டுக்குப பொருத்தமான நவீன தொழில்நுட்ப விவசாயமுறைகளை இங்கு காணக்கூடியதாக அமைந்துள்ளது.

செயற்கை உரங்களுக்குப் பதிலாகக் கூட்டெருவினால் பயிர்ச்செய்கை முறைகளின் வழிகாட்டல்கள் இங்குள்ளது.

திட்டமிட்ட விவசாய நடவடிக்கைகளை கமக்காரப் பெருமக்கள் மேற்கொள்ளவேண்டும் என்பதினை நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றார். (39)

# கிளிநொச்சி நிலைமைகள் குறித்து அமெரிக்க படை அதிகாரிகள் ஆராய்வு

(கொழும்பு)

அமெரிக்கப் படை அதிகாரிகள் குழுவொன்று கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்துள்ளது.

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சி சென்ற அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல் பற்றிக் ஜே சூலர் தலைமையிலான அமெரிக்கப் படை அதிகாரிகள் குழு, கிளிநொச்சிப் படைத் தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவையும் தமது பயணத்தின் போது சந்தித்துப் பேசியுள்ளது.



அத்துடன் வடக்கில் மேறகொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவும் இவர்கள் நேரில் ஆராய்ந்துள்ளனர்.

லெப்.கேணல் பற்றிக் ஜே சூலர் கடந்த மாதமே கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐக்கிய தேசியக் கட்சி வாக்குகளை சிதறடிக்க சூழ்ச்சி நடவடிக்கை

## மங்கள சமரவீர

(கொழும்பு)

கொழும்பில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தவர்களையும் கொழும்பில் வருமானத்தைத் தேடிக்கொள்பவர்களையும் வேறு நகரங்களுக்கு விரட்டியடிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளைச் சிதறடிக்கும் சூழ்ச்சியாகும் என்று அக்கட்சியின் சார்பில் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொழும்பு நகரில் மக்கள் பரம்பரையாக வாழும் பிரதேசங்களிலேயே அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருக்கும் போது, அதற்குப் பதிலாக மக்களை வேறு பிரதேசங்களில் குடியேற்ற முயற்சிப்பதை ஏற்க முடியாது. இந்தநிலையின் கீழ் கார்டினல் மல்கம் ரஞ்சித் ஆயர் போன்ற வணக்கத்துக்குரிய பதவி வகிக்கும் மதத் தலைவர் கொழும்பு மாவட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுடன் இணைந்து வட



கொழும்புத் தொகுதி மக்களுக்கு இதுபோன்ற அழுத்தங்களைக் கொடுப்பது வியப்பளிக்கின்றது

கொழும்பு நகரை அழகுபடுத்தும் போர்வையில் பரம்பரை பரம்பரையாக வாழும் மக்களுக்கு சிறந்த வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறி கொழும்பிலுள்ள பெறுமதிமிக்க காணிகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து இலாபம் பெறுவதே இதன் நோக்கமென சிலர் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு அனுமதிப் பத்திரங்கள் வைத்திருப்போர் கவனத்திற்கு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள சில பரீட்சார்த்திகள் இரண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்து இரண்டு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டமை தெரியவந்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவிக்கிறது. இந்த சட்ட விரோத செயல் குறித்து பரீட்சை நிலைய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இரண்டு அனுமதி அட்டைகளை வைத்திருப்போர் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு இரண்டு வருடங்களுக்கு பரீட்சை எழு தடை விதிக்கப்படுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் இரண்டு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டுள்ள பரீட்சார்த்திகள் அதில் ஒன்றை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற நெடுந்தீவு பேராசிரியர் மருது இந்தப்பு அவர்களின் "மூளை நரம்பியல் சிகிச்சை" எனும் மருத்துவ நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை நூலை வெளியிட்டுவைப்பதனையும் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்ட சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை (நவம்) நூலாசிரியரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதனையும் இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

(பார்த்தீபன்)

# இரு இனங்களும் இணைந்து வாழ்வதற்கு தற்போதைய அரசமைப்பே போதுமானது

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் உள்ள இரண்டு இனங்களும் இணைந்து வாழ்வதற்கு தற்போது இருக்கும் அரசமைப்பே போதுமானது. பேச்சுக்கள் மூலம் இதையே தீர்வாக மக்களிடம் கொடுக்க வேண்டும்.

இப்போது புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டது. எனவே இப்போதிருப்பதைவிட மேலான ஒன்றைச் செய்வதற்கான தேவை இருப்பதாக நான் கருதவில்லை எனப் பாதுகாப்புச் செயலர் கோததபாய ராஜபக்ச கூறியுள்ளார்.

இந்தியாவின் "ஹெட்லைன்ஸ் ருடே" தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது செவ்வியில் மேலும் கூறுகையில்-

இறுதிப் போரின் போது நடந்த சம்பவங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை ஒன்று தேவை என்று கேட்பது எமது ஆளுமையைக் குறைத்து மதிப்பிடுவதாக அமைகிறது.

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு. பிரித்தானியர் விட்டுச்சென்ற சிறந்த நீதித்துறை எம்மிடம் இருக்கிறது. உலகின் மிகப் பெரிய பயங்கரவாதச் சக்தியை நாம் தோற்கடித்திருக்கிறோம்.

பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாமல் பல நாடுகள் திண்டாடி வருகின்றபோது, அதனைச் சாதித்த எம்மை, அனைத்துலக விசாரணையைக் கோருபவர்கள் நம்ப வேண்டும்.

இறைமையுள்ள ஒரு நாட்டுக்குள் எப்படி அனைத்துலக விசாரணை ஒன்றை முன்னெடுக்க முடியும்? அது நியாமற்றது. அவ்வாறு விசாரணை நடத்தக் கோருபவர்களை அனைத்துலக சமூகம் என்று கூறுவது தவறான கருத்து.

அனைத்துலக சமூகத்தில் உள்ள ஒரு சில நாடுகள் இதனைச் செய்யக்கூடும் ஆனால் மீதியாகவுள்ள மொத்த உலகமும் எங்களை ஆதரிக்கிறது. ரஷ்யாவில் ஆரம்பித்து சீனா வரைக்கும், நிச்சயமாக இந்தியாவும் எங்களை ஆதரிக்கிறது. பாகிஸ்தான், அரபு நாடுகள், ஆபிரிக்க நாடுகள் என்று அனைத்தும் எங்களை ஆதரிக்கின்றன.

இவைதான் அனைத்துலக சமூகம். ஒரு சிலர் மட்டும் தங்களை அனைத்துலக சமூகம் என்று கூறிக்கொள்ள முடியாது. அத்தகைய ஒரு அனைத்துலக விசாரணையை இந்தியா தனது நாட்டுக்குள் அனுமதிக்கும் என்று நான் நினைக்கவில்லை. எந்த ஒரு இறைமையுள்ள நாடும் அப்படி அனுமதிக்காது.

போரில் எந்த ஒரு பொதுமகனும் கொலலப்படவில்லை என்று நான் சொல்லமாடடேன். ஆனால் அந்த எண்ணிக்கை மிகச் சிறியது என்பதை என்னால் கூற முடியும் பெரும் படுகொலை என்று அதனை வகைப்படுத்த முடியாது. எனது கேள்வி என்னவென்றால், ஏன் எந்த ஒரு அனைத்துலக நிறுவனமும் எம்மைச் சந்தேகப்பட வேண்டும், ஏன் ஒரு இறைமையுள்ள அரசைச் சந்தேகிக்க வேண்டும் என்பதுதான்.

அரசியல் தீர்வு பற்றிப் பேசுவது பொருத்தமற்றது. இந்தியாவின் ஆலோசனையுடன் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அப்போது அது பற்றிப் புலிகளுடன் பேசப்பட்டது. அந்தத் திருத்தச் சட்டம் வரையப்பட்டபோது இலங்கை அரசுக்கு அதில் எந்தப் பங்கும் இருக்கவில்லை.

ஆனால் பாதுகாப்பு என்று வந்த போது நாம் எந்தச் சந்தர்ப்பத்தையும் வழங்கத் தயாராக இருக்கவில்லை. இப்போது நானும் எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்கப் போவதில்லை.

பாதுகாப்பு விடயத்தில் எந்தவொரு தளர்வையும் நான் அனுமதிக்க மாட்டேன். ஏனெனில் அதனை நாம் செய்ய முடியாது. நாங்கள் தொடர்ந்தும் எமது பாதுகாப்புக் கட்டமைப்புக்களை மேம்படுத்திக் கொண்டே செல்வோம்.

சண்டையிடுவதற்கு ஆயுதம் தாங்கிய விடுதலைப் புலிகள் இல்லை என்ற போதும், புலனாய்வுப் பணிகள் கண்காணிப்பு நடவடிக்கைகள், ஆயுதங்களை இலங்கைக்குள் எடுத்து வருவதைத் தடுப்பதற்கான பணிகள், கரையோரப் பாதுகாப்பு போனற பல விடயங்கள் இருப்பதால் பாதுகாப்பை நாம் ஒருபோதும் தளர்த்தமாட்டோம்.

இந்த அரசமைப்பு அதிகாரங்களை அடிமட்டம் வரைக்கும் வழங்குகிறது. உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தியிருக்கிறோம். விரைவில் மாகாணசபைத் தேர்தலையும் ஜனாதிபதி நடத்துவார்.

எனவே அதிகாரப் பகிர்வு என்ற ரீதியில் நாங்கள் போதியளவுக்கு ஏற்கனவே வழங்கிவிட்டோம். இதைவிட மேலதிகமாக ஏதாவது கொடுக்க வேண்டு[ம்] என்று நான் நினைக்கவில்லை.

இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும் என்று ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றியது அவரது அரசியல் செல்வாக்கை வளர்த்துக் கொள்வதற்காகவே ஆகும்.

உண்மையில் ஈழத் தமிழர்கள் மீது அவருக்கு அக்கறை இருந்தால் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடலுக்குள் வந்து மீன்பிடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் அப்படிப்பட்ட விடயங்கள் வரும் போது அவர்கள் மௌனமாகி விடுவார்கள். அப்போது இலங்கைத் தமிழர்களின் நலன்கள் குறித்து அவர்கள் பேசமாட்டார்கள்.

ஜெயலலிதாவுக்கு உண்மையா்ன நிலவரத்தைப் புரிய வைக்க முயன்றிருக்கிறோம். அதற்காகவே அவருடன் இராஜதந்திர மட்டத்தில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் உதயன் செய்[தி] ஆசிரியர் தாக்கப்பட்டது ஒரு சிறிய விடயம்.

இலங்கையில் நாளாந்தம் நடக்கும் தாக்குதல்களுடன் ஒப்பிடும் போது இது ஒன்றும் பெரிய விடயமே இல்லை. சாதாரணமானது.

ஏனைய நாடுகளிலும் இதுபோன்ற சம்பவங்கள் பொதுவாக நடக்கின்றன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பல்கலைக்கழக மாணவியின் மரணத்திற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்

### அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்



(கொழும்பு)

தலைமைத்துவப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பல்கலைக்கழக மாணவியான நிசாந்தி மதுசானியின் மரணத்திற்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் என அகில இலங்கை பல்கலைக்கழக ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஒன்றியத்தின் தலைவர் சஞ்சீவ பண்டார இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற நிசாந்தி மதுசானிக் குத் தலைமைத்துவப் பயிற்சி என்ற பெயரில் இராணுவ முகாமில் அரசாங்கம் கட்டாயப் பயிற்சி வழங்கியது. அதுவும் கடுங்குளிரான தியத் தலாவையில் இந்த மாணவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. குளிர்தாங்க முடி யாது அவர் மரணத்தைத் தழுவியுள்ளார்.

அரசாங்கத்தின் இந்தக்கட்டாய இராணுவப் பயிற்சியின் மூலமே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. இதற்கு அரசாங்கமும், உயர் கல்வி அமைச்சருமே பொறுப்புக் கூற வேண்டும். எனினும் அரசாங்கம் ஊடகங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத் துள்ளதால் உண்மையை மறைக்க முயற்சிக்கிறது. முன்னரும் கட்டுநாயக்க சானக மற்றும் ருகுணுப் பல்கலைக்கழக மாணவர் சுசந்த பண்டார ஆகியோரின் கொலைகள் தொடர்பிலும் அரசாங்கம் தனது பலத்தைப் பயன்படுத்தி அந்தக் கொலைகள் தொடர்பான உண்மைகளை மூடி மறைத்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்தின் இந்தக் கண்மூடித்தனமான செயலுக்கு மக்கள் திரண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். அப்போதுதான் அரசாங்கம் பொதுமக்களின் நிலைமை குறித்துச் சற்று சிந்திக்கும் என்றார்.

## வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் மனைப் பொருளியல் தையல் பெறுபேறுகள்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட மனைப் பொருளியல், தையல் போட்டிகளின் கோட்ட மட்ட, வலயமட்ட முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன் விபரம் வருமாறு-

**தெல்லிப்பளைக் கோட்டம்**

தரம் - 10

யூனியன் கல்லூரி, வசாவிளான் ம.ம.வி, மகாஜனாக் கல்லூரி.

தரம் - 11

யூனியன் கல்லூரி, வசாவிளான் ம.ம.வி, இளவாலை மெய்கண்டான்.

தரம் - 12

மல்லாகம் ம.வி, மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

தரம் - 13

மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மல்லாகம் ம.வி.

**சண்டிலிப்பாய் கோட்டம்**

தரம் - 10

இளவாலை கன்னியர் மடம், சுதுமலை சிம்மய பாரதி வித்தி, மானிப்பாய் பெண்கள் கல்லூரி.

தரம் -11

இளவாலை கன்னியர் மடம், ஆனைக்கோட்டை றோ.க.த.பாடசாலை, மானிப்பாய் சென்.ஆன்ஸ்.

தரம் - 12

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, இளவாலை கன்னியர் மடம், மானிப்பாய் பெண்கள் கல்லூரி.

தரம் - 13

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய் பெண்கள் கல்லூரி, இளவாலை கன்னியர் மடம்.

**சங்கானைக் கோட்டம்**

தரம் - 10

பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, அராலி சரஸ்வதி வித்தி, சங்கானை சிவப பிரகாசம்.

தரம் - 11

மூளாய் சைவப்பிரகாச வித்தி, பண்ணாகம் மெய்கண்டான் வித்தி, அராலி சரஸ்வதி வித்தி.

தரம் - 12

வட்டு.இந்துக் கல்லூரி.

தரம் - 13

வட்டு.இந்துக் கல்லூரி.

**உடுவில் கோட்டம்**

தரம் - 10

இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

தரம் - 11

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தி, கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

தரம் - 12

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

தரம் - 13

ஸ்கந்வரோதயாக் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

**வலய மட்டம்**

தரம் - 10

யூனியன் கல்லூரி, அர்ாலி சரஸ்வதி வித்தி, இளவாலை கன்னியர் மடம்.

தரம் - 11

இளவாலை கன்னியர் மடம், ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை, யூனியன் கல்லூரி.

தரம் - 12

மல்லாகம் மகா வித்தி, இணுவில் இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

தரம் - 13

மகாஜனாக் கல்லூரி, வட்டு.இந்துக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

**வினாவிடைப் புத்தகம்**

**வலயமட்டம்** - பிரிவு - 1

குளமங்கால் றோ.க.வித்தி, இளவாலை கன்னியர் மடம், இணுவில் இந்துக் கல்லூரி.

பிரிவு - 2

இளவாலை கன்னியர் மடம், வட்டு. இந்துக் கல்லூரி, மல்லாகம் ம.வி. (06)

## உப பொலிஸ் பரிசோதகர் பதவி 49 பட்டதாரிகள் நியமனம்

(கொழும்பு)


இலங்கையில் முதற் தடவையாக உப பொலிஸ் பரிசோதகர் பதவிகளுக்காக 49 பட்டதாரிகள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புதிதாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட பட்டதாரிகளில் 22 பேர் உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களில் அதிவிசேட சித்தி(ஏ) பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உப பொலிஸ் பரிசோதகர் பதவிகளுக்காக 26 ஆயிரம் விண்ணப்பம் செய்திருந்ததாகவும் இதில் 201 பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இம்முறை தெரிவு செய்பப்பட்டவர்களில் பலர் சிறந்த கல்விப் பெறுஉ பேறுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஒரு ஆண்டு காலம் பயிற்சி வழங்கப் படவுள்ளது.



# நீருக்குள் தேவதை

ஜேர்மன் நாட்டில் உள்ள Binnenalster ஏரியில் அழகான பெண் உருவச்சிற்பம் ஒன்று கடந்த மூன்றாம் திகதி முதல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பெண்ணின் முகம், கால்முட்டிகள் ஆகியன தெரிகின்றன. ஏரியில் பெண் ஒய்வெடுக்கின்ற கோணத்தில் சிற்பம் செதுக்கப்பட்டு உள்ளது. நான்கு மீற்றர் உயரம், மூன்று மீற்றர் நீளம் உடையது. மலக்கிய மெத்து, உருக்கு ஆகியவற்றில் செதுக்கப்பட்டு உள்ளது. கலைஞர் Oliver Voss இச்சிற்பத்தைச் செதுக்கி உள்ளார். கடந்த 10 ஆம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டு இருக்கும்.

சுற்றுலாப் பயணிகளை இச்சிலை பெரிதும் ஈர்த்துள்ளது.


# மிகப்பெரிய பூஞ்சை


காளான் போன்ற பெரும் பூஞ்சை சீனாவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் பூஞ்சை 10 மீற்றர் நீளமும், 80 செ.மீ அகலமும் கொண்டதாக உள்ளது. இந்த ராட்சத பூஞ்சை 20 ஆண்டுகள் வயது உடையதாகும். 2008 ஆம் ஆண்டு சீனாவின் புஜியான் மாகாணத்தில் புதிய வகை பூஞ்சை பதிவு செய்யப்பட்டது. இந்தப் பூஞ்சையை ஷென்யாங்கில் உள்ள சீன அறிவியல் கல்வி அமைப்பின் உயிரி பதப்படுத்துதல் துறை பேராசிரியர் யுசெங் மற்றும் அவரது உதவியாளர் மருத்துவர் குல் பதிவு செய்துள்ளார்.

மிகப்பெரிய பூஞ்சையை இவர்கள் 2010 ஆம் ஆண்டு கண்டுபிடித்தனர். பூஞ்சைகள் இவ்வளவு பெரியதாக வளருமா? என அவர்கள் ஆச்சரியம் அடைந்தனர். மிகப்பெரும் ராட்சதப் பூஞ்சை பிராக்கட் பூஞ்சை என அறியப்படுகிறது. ராட்சத வடிவ பூஞ்சை மரத்திற்கு அடியே வளர்ந்து உள்ளதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பூஞ்சை 400 முதல் 500 கிலோ எடை கொண்டதாக உள்ளது. இதில் இன உற்பத்தியை பெருக்கும் 45 கோடி ஸ்போர்கள் இருப்பதாகவும் ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.


# பறக்கும் தீவு

பிரித்தானியாவிற்கு மேலாக நின்ற இராட்சதப் பறக்கும் தீவு தற்போது ஸ்லோவேனியாவின் மேலே பறப்பதாக நம்பப்படுகிறது. தீவொன்று நாட்டின் மேல் பறக்கிறதா என வியப்புடன் பார்க்கிறீர்களா? பயம் கொள்ள வேண்டாம் இது வேற்றுக் கிரகமோ, வான் கற்களோ அல்ல. அப்படி என்றால் இது என்ன பறக்கும் தீவு





ஹீலியம் வாயுவால் அடைக்கப்பட்ட ஒரு புடைப்பே இந்தப் பறக்கும் தீவு. இந்த 12,000 பவுண் கலைப்படைப்பு கேம் பிரிட்ஜ்ஜின் இரகசியத் தோட்டக் கொண்டாட்டத்தில் தான் மேலே



கட்டி விடப்பட்டிருந்தது. இருப்பினும், யூலை 24 இல் இனந்தெரியாத இரண்டு இளைஞர்களால் இரவோடிரவாக இதனைக்கட்டியருந்த 5 கயிறுகளும் அவிழ்த்து விடப்பட்டிருந்தன.

தற்போது 7மீ. அகலமான இந்தப் படைப்பைக் கண்டுபிடிக்க ஆட்கள் விடப்பட்டுள்ளனர். அமெரிக்கத்தேசிய சமுத்திர மற்றும் சூழல் நிர்வாகத்தினர் இந்தக் காற்றடைக்கப்பட்ட நிலப்பகுதி தற்போது ஸ்லோவேனியாவில் இருக்கலாமெனத் தெரிவிக்கின்றனர். ஆனால் இதனை உருவாக்கியவர்கள் இது தற்போதும் பிரித்தானியாவின் மேலேயே இருக்கலாமென நம்புகின்றனர். இதன்காரணமாக, அது விடுவிக்கப்பட்ட நேரத்தில் காற்றின் வேகத்தைக் கணக்கிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத்தீவு அமெரிக்காவில் இவ்வருட Burning Man விழாவில் பறக்கவிடப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தண்ணீர் நகரம்

இத்தாலியில் உள்ள வெனிஸ் என்ற நகரம் மிகவும் அழகான மிதக்கும் நகரம் ஆகும். இந்த நகரத்திற்கு பல புனை பெயர்கள் உள்ளன. கால்வாய் நகரம் மற்றும் பாலம் நகரம் ஆகியவை ஆகும். வெனிஸ் நகரத்தின் முக்கிய சாலை இந்தப் பெரிய கால்வாய் தான்.

இந்த நகரத்தில் மொத்தம் 117 தீவுகள் அமைந்துள்ளது.





# தொடும் திருவிழா



லூனார் நாட்காட்டியின்படி சீனாவில் தற்போது ஏழாவது கடந்த 31 ஆம் திகதி ஆரம்பமானது. பேய்களின் மாதம் என்று இது வர்ணிக்கப்படுகின்றது. அதிஷ்டம் இல்லாத மாதமாக சீனர்களில் பெரும்பாலானோரால் நம்பப்படுகின்றது. இம்மாதங்களில் பேய்களுக்கு ஆத்ம சாந்தி கோரி சமயச் சடங்குகள் மற்றும் வழிபாடுகள் ஆலயங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. சீனாவில் எஜி.ஆ நகரத்தை சேர்ந்த சிறுபான்மையினரான ஜி இன மக்களால் இப்பேய்மாதத்தில் கொண்டாடப்படுகின்றது பெண்களின் மார்புகளை ஆண்கள் தொடுகின்ற திருவிழா.

மாதத்தின் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் நாட்களில் கொண்டாடப்படுகின்றது. இந்நாட்களில் பெண்களின் மார்புகளை ஆண்கள் தொடுகின்றமை பெரிதும் வரவேற்கப்படுகின்றது. சுயி அரச வம்சத்தினர் கி.பி 581 முதல் கி.பி 618 வரை சீனாவை ஆட்சி செய்தனர். இக்காலப் பகுதியில் ஜி இனத்தைச்சேர்ந்த ஏராளமான ஆடவர்கள் கட்டாயப்படுத்தி இராணுவத்தில் சேர்க்கப்பட்டு போரில் இறந்தனர். இவர்கள் பெண் வாடையே பட்டு இராதவர்கள். பெண்களைத் தொட்டு இராதவர்கள். எனவே, இவர்களின் ஆவிகள் பரிசுத்தமான, ஆடவர்களின் கைகள்பட்டு இராத 10 பெண்களை இந்நாட்களில் சொந்தமாக்கிக்கொள்ளப் பாரக் கின்றன என்பது ஜி இன மக்களின் பாரம்பரிய நம்பிக்கை. ஆகவே ஆவிகளிடம் இருந்து தப்பிக் கொள்கின்றமைக்காக 14 வயதுக்கு மேற்பட்ட பெண் கள் மார்புகளை ஆண்கள் தொட்டுக்கொள்கின்றமையை அனுமதிக்கின்றார்கள். மார்பு களைத் தொடுங்கள் என்று ஆண்களைக் கேட்டுக்கொள்கின்றார்கள் பெண்கள்.

# குறுகிய நேரத்தில்

ஒளிப்படங்களை எடிட் செய்ய வேண்டுமெனில் ஏதாவது ஒரு போட்டோ எடிட்டர் மென்பொருள் தேவை. இந்த வகையில் அனைவரும் அறிந்த மென்பொருள் போட்டோஷாப் . இதில் தான் ஒளிப்படங்களை எடிட் செய்ய வேண்டும் என்பதில்லை உங்களுக்கு விருப்பமான எந்த மென்பொருளையும் பயன்படுத்தலாம் . ஆனால் அவையாவும் சிறப்பாக இருப்பதில்லை என்று குறை இருப்பினும் போட்டோஷோப்க்கு மாற்றான சிறந்த மென்பொருள் எடிட்டிங் மென்பொருள் ஒன்று உள்ளது. இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கி நிறுவிக்கொள்ளலாம். போட்டோஷோப்பை விட எளிதாக இயக்கலாம். இந்த மென்பொருள் மிகவும் சிறப்புடையது. இது மிகவும் சிறியதாகும் 4 MB இந்த மென்பொருளில் 50க்கும் மேற்ப்பட்ட சிறப்பு எபெக்டுகள் உள்ளன . இதை போட்டோஷோப் இல்லாத நேரத்தில் இந்த மென்பொருளானது கைகொடுக்கும்.

ஒளிப்படங்களை மேலும் அழகுபடுத்த விரும்பினால் இதில் நிறைய டூல்களை இணையத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கிப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இந்த மென்பொருளின் உதவியுடன் ஒளிப் படங்களை சிறப்பாக எடிட் செய்ய முடியும். விண்டோஸ் 7 ஆப்பேரட்டிங் சிஸ்டத்தில் இந்த மென்பொருளானது முழுமையாக வேலை செய்கிறது .

இணையதள முகவரி:- http://www.phoxo.com/en/

கணினி முலை

# திராவிட கட்சிகளுடன் கூட்டணி இல்லையென தீக்குளித்துக் கூறவும் தயாராகும் ராமதாஸ்



(விழுப்புரம்)

திராவிடக் கட்சிகளோடு, இனிக் கூட்டணி வைக்கமாட்டேன் என்பதைத், தீக்குளித்து நிரூபிக்கவும் தயார் என்று, பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்தார்.

விழுப்புரத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த பா.ம.க. பொதுக்குழுக் கூடடத்தில், அவர் பேசியதாவது:

பொதுக்குழு கூட்டி, இனித் திராவிடக் கட்சிகள், தேசியக் கட்சிகளுடன் கூட்டணியில்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றினோம். எமது கொள்கையைப் பின்பற்றும் கட்சியோடு, அணிவகுப்போம். திராவிடன் எனக் கூறுவதை விட, தமிழன் என்பதில் பெருமை கொள்வோம். திராவிடம் எனக் கூறி எம்மையும், மக்களையும் ஏமாற்றினர், ஏமாந்தோம். அடைந்தால் திராவிட நாடு, இல்லையேல் சுடுகாடு என்றனர். அந்தக் கொள்கையை, சுடுகாட்டுக்கு அனுப்பியது தான் மிச்சம்.

"மானாட மயிலாட" பார்க்க, கட்சிக்கு ஒரு ரி.வி தொடக்கியுள்ளனர். திராவிடக் கட்சிகள் ஆட்சியில் சினிமா, அரசியல் காரணமாக சீரழிவுகள் தான் அதிகம். நீங்களும் திராவிடக் கட்சிகளிடம், கூட்டணி வைத்தீர்களே என கேட்கிறார்கள். கூட்டணியில் இருந்த கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நான்கு ஆண்டுகளும் எதிர்க்கட்சியாகவே இருந்து, எதிர்த்து கேள்வி கேட்டோம். தி.மு.க.வினர் கூட பயந்திருநதனர். தி.மு.க. ஆட்சியில் நாம் கொடுத்த தொல்லையில் கருணாநிதி தலையில் அடித்துக்கொண்டு தொலைந்து போ என்றதால் வெளியேறினோம்.

தனித்து நிற்க நல்ல முடிவெடுத்துள்ளீர்கள், உறுதியாக இருப்பீர்களா என்று கேட்கின்றனர். உறுதியாக இருப்போம் என்று நிரூபிக்க, தீக்குளிக்கணுமா. எங்கிருந்தாவது குதிக்கனுமா, சொல்லுங்க தயார். இவர்களிடம் இனி எக்காலத்திலும் உறவும் இல்லை ஒட்டும் இல்லை என்பது உறுதி. தனித்து நிற்கும் முடிவை வரவேற்று, தென்மாவட்டங்களில் இருந்தும் அதிக கடிதங்கள் வருகின்றன. மதுவைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள், வாக்கு போய்விடும் என்கிறார்கள். போகட்டும் எமக்கு வாக்கு வேண்டாம் இவ்வாறு பா.ம.க. ராமதாஸ் பேசினார்.

# சாதாரண பிரிவிற்கு சோனியா மாற்றம்



(புதுடில்லி)

அமெரிக்க மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட சோனியா, தற்போது குணமடைந்து வருவதாகவும், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து சாதாரண பிரிவிற்கு அவர் மாற்றப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அவர் 24 மணி நேரம் தீவிரக் கண்காணிப்பில் இருந்தார். அவர் குணமடைய பிரார்த்தித்தும் வாழ்த்தியும் தகவல்கள் கொடுத்த அனைவருக்கும் சோனியாவின் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர்.

சோனியா தற்போது சாதாரண பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று காங்கிரஸின் ஊடகத் தொடர்பாளர் ஜனார்த்தன் திவிவேதி தெரிவித்தார்.

64 வயதான சோனியா, கடந்த 4 ஆம் திகதி அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

# அடுத்த ஒன்பது ஆண்டுகளில் இந்தியா வளர்ச்சியடைந்து விடும்

## முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறுகிறார்

(அருப்புக்கோட்டை)

இந்தியா எதிர்வரும் 2020 இல் வளர்ந்த நாடாக மாறிவிடும் என்பதில் ஐயமில்லை என, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறினார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தேவாங்கர் கலை கல்லூரியில் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர் மேலும் பேசியதாவது-

மாணவர்களே உங்களை உறங்க விடாமல் செய்வது தான் கனவு. கனவு காண்பது என்பது ஒவ்வொரு மாணவன், இளைஞனின் முக்கியமான விடயம். மாணவர்கள் கனவுகள் காண வேண்டும். அதன் மூலம் தங்கள் இலட்சியத்தை அடைய வேண்டும். உங்கள் அனைவரையும் 2030 இல் சந்திரனில் சந்திக்கிறேன். அப்போது எனக்கு வயது 100. நாம் உழைத்துத்தான் நாட்டை வளமான நாடாக ஆக்க வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு அடிப் படை, கிராமங்களின் வளர்ச்சிதான்.



கிராம எழுச்சி இந்தியாவின் வளர்ச்சி. கிராமங் களில் வீதிகள் மூலம் இணைப்பு, தகவல தொடர்பு இணைப்பு, அறிவு சார்ந்த இணைப்பு இவை மூன்றும் சேர்ந்தால் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். இன னும் ஒன்பது ஆண்டுகளில் (2020) இந் தியா வளர்ந்த நாடாக மாறும். உங்கள் சிந்தனை, செயல் ஒன்றுபட்டால் இந்தியா முன்னேறும். அனைத்து வசதிகளிலும் மேம்பட்ட நாடாக இந்தியாவை மாற்ற வேணடும் என்றார்.

# இயற்கைச் சீற்றங்களின் ஆபத்து பட்டியலில் இந்தியா 2ஆவது இடம்

(சென்னை)

ஆசிய நாடுகளில் இயற்கைப் பேரழிவு ஆபத்துகள் நிறைந்த நாடுகள் பட்டியலில் இந்தியா 2 ஆவது இடத்தில் உள்ளதாக ஐ.நா. நிபுணர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சென்னை அவசரநிலை நிர்வாகப் பயிற்சிப் பட்டறைத் தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட யுனிசெவ் உதவிப் பிரநிதி டேவிட் மெக்லாப்லின் இது குறித்துக் கூறுகையில், இந்தியாவின் நிலப்பகுதிகளில் 60 சதவீதம் பூகம்ப ஆபத்துகள் நிறைந்தது.

ஒருகோடியே 40 இலட்சம் ஹெக்டேயர்கள் நிலப்பகுதிகளில் வெள்ள அபாயம் உள்ளது. கடற்கரைப்பகுதிகளில் 8,000 கிலோமீற்றர் பகுதிகள் கடும் புயற், காற்று ஆபத்துக்களைச் சந்திக்கக் கூடியவையாகும். இந்த இயற்கைப் பேரழிவினால் ஏற்படும் நட்டம் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதமாகவோ, ஒட்டுமொத்த அரசு வருவாயில் 12 சதவீதமாகவோ இருக்கலாம்.

இந்தியாவில் உள்ள 27 மாநிலங்கள் இயற்கைப் பேரழிவுக்கு இலக்காகும் அபாயம் உள்ளது. இதனால் நாட்டின் வருவாயில் குறிப்பிடத்தகுந்த பங்கு பேரழிவு நிவாரணத்திற்குச் செலவிடவேண்டிய நிர்பந்தம் ஏற்படும் என்றும் உலக வங்கி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக யுனிசெவ் நிபுணர் தெரிவித்தார்.

எனவே நமது அரசு எந்திரம் இயற்கைப் பேரழிவு நடந்து முடிந்தவுடன் செய்யும் வழக்கமான பணிகளைவிட அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது.

2010 ஆம் ஆண்டு மட்டும் 373 இயற்கைப் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன. இதில் சுமார் 2,96,000 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 2 கோடி பேர் வீடிழந்துள்ளனர். இதன் மூலம் ஏற்பட்ட செலவினம் மட்டும் 110 பில்லியன் அமெரிக்க டொலர்கள்.

இந்த இயற்கைப் பேரழிவுகளில் 77 சதவீதம் பூகம்பம் மற்றும் சுனாமிப் பேரலைகளால் ஏற்பட்ட மிகப்பெரிய அழிவுகளாகும். 19 சதவீம் மட்டுமே மழை, வெள்ளம் மற்றும் பிற இயற்கைச் சீற்றங்கள் பங்களித்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.




# வரலாற்றுத் தவறுகளையும் குற்றங்களையும்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

யதாரத்தத்தை மறைத்து போரில் பொதுமக்கள் இழப்பு பூச்சியம் எனும் பொய்யை கிளிப்பேச்சுப்போல திரும்பத்திரும்ப கூறி வருகிறார்கள்.

நந்திக்கடலுக்கும் மற்றும் திறந்த வெளிச் சிறைச்சாலை முகாம்களுக்கும் வழிகோலிய புலிகளின் குற்றங்களையும் மற்றும் தவறுகளையும் தெளிவாக ஆராய்ச்சி செய்து கொண்டிருக்காமல் தமிழர்களின் தோல்வியையும் மற்றும் அவர்களின் ஐயப்பாடற்ற துன்பத்தையுமே கவனத்தில் கொள்ளவேண்டும்.

புலிகளின் தோல்வியுடன் ராஜபக்ஷ நிர்வாகத்துக்கு புலிகளின் பிறப்புக்கும் யுத்தத்தை தொடரவும் காரணமாகவிருந்த அரசியல் பிரச்சினைகளையும் மற்றும் மனக்குறைகளையும் தீர்ப்பதற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வாய்ப்பு பயன்படுத்தப்படவில்லை.

வடபகுதியில் நடைபெற்ற உள்ளுராட்சித் தேர்தல்கள் தெளிவாக அடையாளப்படுத்தியிருப்பது, ஆட்சியின் தற்போதைய சிங்கள மேலாதிக்கப் போக்கினால் உருவாகவிருக்கும் ஆபத்தினை. துரதிருஷ்டவசமாக இந்தப் பாடம் ஆளும் குடும்பத்தினரையும் அதன் ஏவலர்களினதும் கவனத்தை ஈர்க்கத் தவறிவிட்டது. சமீபத்தில் சகோதரரும் அமைச்சருமான பசில்ராஜபக்ஸ ஒரு நேர்காணலில் தேசியக் கூட்டமைப்பின் அதிகளவு அதிகாரப்பரவலாக்கல் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாகக் கூறியிருப்பது, இந்த அதிகாரங்களை வழங்கக்கூடாது என்பதற்காக ஜனாதிபதிக்கு மிகப்பெரிய ஆணை கிடைத்துள்ளது என்று. (டெய்லி மிரர் 28.7.2011)

அமைச்சர் சம்பிக ரணவக்க மறைமுகமாக அச்சுறுத்தியிருப்பது தேசிய நிதியத்தின் மூலம் வழங்கும் வட பகுதிக்கான அத்தியாவசியப் பொருட்களை கிடைக்காமற் செய்யவேண்டும் என்று. இத்தகைய குறிப்புகள் வெளிப்படுத்துவது ராஜபக்ஷக்கள் வடபகுதியில் தங்களுக்கு ஏற்பட்ட படுதோல்விக்குப் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பழிவாங்க அல்லது தண்டனை வழங்க முற்படலாம் என்று.

இந்தச் சிங்கள மேலாதிக்கத்தின் தன்மை தமிழ் தீவிரவாதத்தின் மேலெழுச்சிக்கான மறறொரு நிலையை உருவாக்கலாம் (டோனி ஜூட் மற்றொரு தருணத்தில் கூறியிருப்பது போல 'முதலாவதின் கிட்டப்பார்வை இரண்டாவதின் விவாதத்துக்கான போலியான நம்பகத்தன்மையை கடனாக வழங்குகிறது')

இதுவரை இலங்கையிலுள்ள தமிழர்கள் அமைதியாகவும் ஜனநாயக முறைப்படியும் 1977 நாடாளுமன்றத் தேர்தல்களில் பிரிவினையை உறுதி செய்ததுக்கும் மற்றும் 1983இற்குப் பின்னான ஈழப்போரை ஆதரித்ததுக்கும் இழுத்து வந்த காரணங்கள், விளங்கிக் கொள்ளவோ ஏற்றுக் கொள்ளவோ மற்றும் தீர்க்கப்படவோ இல்லை, சிங்கள தமிழ் பிரிவினையை சமீபத்தில் வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளால் தணிக்க முடியாது.

பக்கச் சார்பான பெரும்பான்மையான சிங்கள, மற்றும் ஆங்கில மொழி ஊடகங்கள் தமிழர் பிரச்சினைகளை மட்டுப்படுத்தி தகவல்களை வெளியிடுவதால், வதைபடும் இந்த இனப்பிளவு தென்பகுதியினரின் கண்களுக்குப்படாமலோ காதுகளுக்கு கேட்காமலோ போய்விடக் கூடும். வெடிக்கும் நேரம் நெருங்கும் வரை.

**திஸ்ஸராணி குணசேகரா**

# அருள் இல்லாத மனிதன் பற்று




இன்றைக்கு மனிதனுக்கு கடவுளைப்போல தானும் செய்ய வேண்டும் என்று ஆசை, பேதுருவுக்கு இயேசுவைப்போல கடலின்மேல் நடக்க வேண்டும் என்று ஆசை வந்ததுபோல. இயேசுவும் இதைத் தவறு என்று சொல்லவில்லை. பேதுருவை அனுமதித்ததுபோல மனிதனின் ஆசைகளை அனுமதிக்கிறார்.

இன்று மனிதனின் ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் எல்லாவற்றையும் இறைவன் அனுமதிக்கிறார்.

ஆனால் பேதுரு கடலில் மூழ்கியதுபோல மூழ்கிவிடக் கூடாதே. பேதுருவுடைய நம்பிக்கையின்மை, பயம், ஆணவம், தெயவீக வலுவின்மை, இவையே அவர் மூழ்குவதற்குக் காரணமாயிருந்தன. ஆசைப்படுவதில் தவறில்லை. ஆண்டவனைப்போன்ற ஆற்றல் இருக்கிறதா? தெய்வீக ஆற்றலால், இறை உணர்வுகளால் மனிதன் நிரம்பியிருக்கிறானா?

இயேசு இறைமகனாய் இருந்தும், "அவர் தனியே இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின்மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியே இருந்தார் 14 :23 தெய்வீக ஆற்றலால் தன்னை நிறைத்துக் கொண்டார். கடல் மீது நடக்குமுன் கடவுள் அருளால் நிரப்பிக்கொண்டார்.

இந்த தெய்வீக ஆற்றல் இல்லாத ஆசை, ஆபத்தில் முடிவது எதிர்பார்க்கக்கூடியதே.

மறையாசிரியர்
யா. அலெக்சாண்டா

# தாய்லாந்து நாட்டில் முதல் பெண் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்



(பாங்கொங்)

தாய்லாந்து நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் கட்சி படுதோல்வியை சந்தித்தது. இதையடுத்து தாய்லாந்து நாட்டின் முதலாவது பெண் பிரதமராக எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஈங்லக் ஷினவத்ரா தேர்ந்தெடுக்கப்பட்டார். தாய்லாந்து நாட்டில் கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ஜனநாயகக் கட்சி தோல்வியைச் சந்தித்தது.

எதிர்க்கட்சியான தாய் கட்சி அதிக இடங்களில் வெற்றிபெற்றது. புதிய பிரதமராக யாரை தேர்வு செய்வது என்பது குறித்து தாய்லாந்து நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த வாக்கெடுப்பில் 296 எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்ற பியூயா தாய் கட்சியின் தலைவர் ஈங்லக் ஷினவத்ரா வெற்றிபெற்றார். இந்த தகவலை நாடாளுமன்ற சபாநாயகர் சோமாசக் கியாட்சுராமோத் தெரிவித்தார்.

இந்தப் பிரதமர் தேர்வு பற்றிய முடிவு தாய்லாந்து மன்னருக்கு அனுப்பி வைக்கப்படும். அவரது ஒப்புதலைப் பெற்றபின்பு ஈங்லக் தாய்லாந்து நாட்டின் முதலாவது பெண் பிரதமராகவும், நாட்டின் 28 ஆவது பிரதமராகவும் விரைவில் பொறுப்பேற்பார். பிரதமர் பதவிக்கு ஈங்லக் மட்டுமே போட்டியிட்டார்.

எதிர்க்கட்சியின் சார்பில் எந்த பிரதமர் வேட்பாளரும் நிறுத்தப்படவில்லை. மேலும் வாக்கெடுப்பின்போது எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சபைக்கு வரவில்லை.

கடந்த ஜூலை 3 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பியூயா தாய் கட்சி 5 இல் 3 பங்கு மெஜாரிட்டியை பெற்றது. ஆளும் ஜனநாயகக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க கடன் உச்சவரம்பு விவகாரம் நாடாளுமன்றம் மீது மக்கள் அதிருப்தி

(வொஷிங்டன்)

அமெரிக்க கடன் உச்ச வரம்பு விவகாரத்தில், அமெரிக்க நாடாளுமன்றம் மீது மக்கள் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். நாடாளுமன்றத்தில் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களுக்கும், குடியரசுக் கட்சியினருக்கும் இடையே கடும்மோதல் நீடித்தது.

உச்சவரம்புக் கெடு திகதியான கடந்த இரண்டாம் திகதிக்கு ஒரு நாள் முன்பாக அமெரிக்க நாடாளுமன்க் கடன் உச்சவரம்பை அதிகரிக்க ஒப்புக் கொண்டது. நாடாளுமன்றத்தின் காலதாமதமான இந்த நடவடிக்கை 82 சதவீத அமெரிக்க மக்களுக்கு அதிருப்பதியை தந்துள்ளது. கடன் உச்ச வரம்பு குறித்து அமெரிக்க நாடாளுமன்றம் மேற்கொண்ட செயற்பாடு குறித்து கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. 14 சதவீத மக்கள் மட்டுமே நாடாளுமன்ற செயற்பாட்டை ஏற்றுக்கொண்டன.

அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பு 14.3 இலடசம் கோடி டொலர் ஆகும். இதனால் உச்சவரம்பை அதிகரிக்க வேண்டிய நிலையில், குடியரசுக் கட்சியினர் வாக்கு வாதத்தில் ஈடுபட்டுள்ளனர். கடைசி நேரத்திலேயே 2.3 இலட்சம் கோடி டொலர் வரம்பை மேலும் அதிகரிக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. கடந்த 34 ஆண்டுகளில், முதன்முறையாக நாடாளுமன்றம் மீது, மிக அதிகபட்ச அதிருப்தி தற்போது மக்களிடையே ஏற்பட்டது. இதற்கு முனனர் 2010 ஆம் ஆண்டில் 77 சதவீத மக்கள் அமெர்க்க நாடாளுமன்ற செயற்பாடு குறித்து விமர்சித்தனர்.



பராகுவே நாட்டு அதிபர் டேவிட்லோவெல் மற்றும் துணை அதிபர் பெடலிகோ பிரான்கோ ஆகியோர் அந்நாட்டின் முதல் டைட்டானியம் பைலட் ஆய்வு கூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டுள்ளதைக் காணலாம்.

# அணுசக்தி தொழில்நுட்ப ஏற்றுமதி ஜப்பான் அரசு மீண்டும் அறிவிப்பு

(டோக்கியோ)

சுனாமியால் பாதிக்கப்பட்டாலும், ஏனைய நாடுகளுக்குத் தொடர்ந்து அணுசக்தி தொழில்நுட்பத்தை ஏற்றுமதி செய்ய ஜப்பான் முடிவு செய்துள்ளது. கடந்த மார்ச் மாதம் ஜப்பானில் கடுமையான பூகம்பம், சுனாமி ஏற்பட்டது. இதில் புகுஷிமா பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணுஉலைகள் பாதிக்கப்பட்டு கதிர்வீச்சு பரவியது.

இதனால் ஜப்பான் கடும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது. எனினும், அணுசக்தி தொழில்நுட்பத்தை தொடர்ந்து ஏற்றுமதி செய்ய ஜப்பான் அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இது குறித்து ஜப்பான் அரசு வெளியிட்ட அறிக்கையில், ஜப்பான் அணுசக்தி தொழில்நுட்பத்தைப் பெற பல நாடுகள் விரும்புகின்றன.

வியட்நாமுடன் கடந்த ஆண்டு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மின்தேவை அதிகரித்துள்ளதால் அணுசக்தி தொழில்நுட்பத்தை ஜப்பானிடம் இருந்து இறக்குமதி செய்ய இந்தியாவும் பேச்சு நடத்தி வருகிறது. ஜப்பான் அணுசக்தி தொழில்நுட்பத்தில் சர்வதேச தரத்தில் பாதுகாப்பு அம்சங்கள் உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலாய்லாமாவின் பிரதிநிதி நேபாளப் பொலிஸாரால் கைது

(காத்மாண்டு)

திபெத் புத்தமதத் தலைவர் தலாய் லாமாவின் பிரதிநிதி, நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். சீனாவின் கட்டுப்பாட்டில் திபெத் உள்ளது. புத்தமதத் தலைவர் தலாய்லாமா, திபெத்துக்கு முழு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று கோரி போராடி வருகிறார். திபெத் புத்தமதத் தலைவர்கள் வெளிநாடுகளில் இருந்து தனி அரசும் நடத்தி வருகின்றனர். இதனால் தலாய்லாமாவின் ஆதரவாளர்களுக்கு சீன அரசு பல வகைகளில் நெருக்கடி கொடுத்து வருகிறது.

இந்நிலையில் நேபாளத் தலைநகர் காத்மாண்டு புறநகர் பகுதியான லஸிம்பட்டில் தங்கியிருந்த தலாய் லாமாவின் உயர்பிரதிநிதி தின்லே லாமாவை (வயது-55) என்பவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் நான் ஈடுபடவில்லை. எனவும் அலுவலகம் அரசியலோடு தொடர்புடையது அல்ல.

அகதிகளாக வந்தவர்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமெனவும் பொலிஸாருடன் தின்லே வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். எனினும், அவர் சிறையில் அடைக்கப்பட்டார். சீனாவின் நெருக்கடி காரணமாகவே நேபாள அரசு கைது நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

என்னிடம், உலகில் ஒருவரை மட்டுமே உயிர்ப்பிக்க வைக்க முடியும். நீங்கள் யாரை விரும்புகிறீர்கள் எனக் கடவுள், உலகம் அழியும் நாளில் கேட்டால், நான் ஷேக்ஸ்பியரையே உயிர்ப்பிக்கக் கோருவேன். ஏனெனில், ஷேக்ஸ்பியரே பின் இந்த முழு இயக்கத்தையும் உருவாக்கி விடுவாரே!

**- ஜோர்ஜ் லூயி போர்ஹே**

யார் பெரியவர் என்பதில் கடவுளுக்கும் சாத்தானுக்குமிடையே போட்டி. கடவுள் தகதகவெனப் பொசியும் பகல்பொழுதைப் படைத்தார். சோம்பலை அனுப்பி வைத்தது சாத்தான். மனிதனை, அவன் வழியிலேயே போய்த் திருத்த எண்ணிய கடவுள், அவன் தூங்குவதற்கென்றே இரவைப் படைத்தார். அச்சத்தை ஏற்படுத்தியது சாத்தான். மனிதன் தன்னம்பிக்கை பெறுவதற்காக அவனது இதயத்தில் கவிதையையும், கலைகளையும் சுரக்கச் செய்தார் கடவுள். பொய் என்பதை உண்டாக்கியது சாத்தான். மனிதனின் மகிழ்ச்சிக்காக காதல் என்ற அமுதை அனுப்பி வைத்தார் கடவுள். அதில் காமக் குரூரம் என்ற நஞ்சைக் கலந்தது சாத்தான். தடுமாறிக் கொண்டிருந்த மனிதனைப் பலப்படுத்துவதற்காக உறவுகளை அமைத்துக் கொடுத்தார் இறைவன். பணத்தைக் கண்டுபிடித்தது சாத்தான். நட்பு அதைச் சிதைக்கப் பொறாமை, உழைப்பு அதைத் திசைதிருப்பப் பேராசை என்று போட்டி தொடர்ந்து கொண்டேயிருந்தது. இனி, மனிதனைத் தன்னருகே கொண்டுவந்து விடலாம் எனத் தீர்மானித்து சில பாதைகளைக் கொடுத்தார் கடவுள். மதங்கள் என்ற அந்தப் பாதையில் மனவேற்றுமை என்ற முட்களைப் பரப்பி, மனிதனை வெறிகொள்ள வைத்தது சாத்தான்.

நாம் கடவுளின் குழந்தைகளாக இருக்கும்போது கவிஞர்களாகவும், காதல்நெஞ்சம் கொண்டவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், அன்பு நிறைந்தவர்களாகவும், அடுத்தவர் துயரையும் அறிந்து விலக்கப்பாடுபடுபவர்களாகவும் இருக்கிறோம். சாத்தானின் கைப்பாவையாக ஆகும்போது சோம்பேறிகளாகவும், பொய்யர்களாகவும், பேராசைக்காரர்களாகவும், வன்முறையாளர்களாகவும் மாறிவிடுகிறோம்

**- நாடோடிக் கதை**

பிரபஞ்சத்தைப் படைத்துக் கொண்டிருந்தான் கடவுள். வேலை இன்னும் இழுத்துக் கொண்டே கிடந்தது. கோடிக்கணக்கான நட்சத்திரங்களையும், கிரகங்களையும் உருவாக்க வேண்டுமென்றால் சும்மாவா? நெற்றியில் வழிந்த வியர்வையைக் கைவிரல்களால் வழித்து விட்டுக் கொண்டான். சூரிய மண்டலம் சம்பந்தமான வேலைகளும் முடிந்து விட்டன. ஒரு நட்சத்திர மண்டலமும் இன்னொரு நட்சத்திர மண்டலமும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாதவாறு, யாராலுமே புரிந்து கொள்ள முடியாத கணித சூத்திரங்களை உருவாக்கி எல்லாவற்றையும் இணைக்க வேண்டும். அதற்குத் தேவை, காலம். காலமும் உருவாக்கப்பட்டு அந்த வேலையும் முடிந்தது. பூமிக்குத் தண்ணீரும் காற்றும் புவியீர்ப்பு விசையும் அளிக்கப்பட்டது. இவ்வளவுக்குப் பிறகும் ஒரு வேலை பாக்கியிருந்தது. இருப்பதிலேயே ஆகக் கடினமான வேலை அதுதான் என்று தோன்றியதால் ஒரு தேவதையைத் துணைக்கு அழைத்தான் கடவுள்.

சிருஷ்டி முடிந்து விட்டது. ஆனால் இந்த சிருஷ்டியின் காரணம் என்ன? இதன் அர்த்தம் என்ன? என்பதன் பதில் மட்டும்தான் எஞ்சியிருக்கிறது. அந்த பதில் ஒரு பொக்கிஷம். விலை மதிக்க முடியாத அந்தப் பொக்கிஷத்தை நீதான் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். செய்வாயா?" என்று கேட்டான் கடவுள்.

"ஓ நிச்சயமாக. அந்தப் பொக்கிஷத்தை யாராலும் ஏறி வர முடியாத ஒரு மலை உச்சியிலே கொண்டு போய் வைத்து விடுகிறேன், பிரபு."

"மனிதர்களுக்கு அதெல்லாம் ரொம்ப சுலபம்."

"அப்படியானால் அதை ஒரு பாலைவனத்தின் மத்தியிலே வைத்து விடுகிறேன். யாராலும் நெருங்க முடியாது."

"ம்ஹூம். ஒட்டகம் என்ற பிராணியைப் படைத்திருக்கிறேன். அதில் ஏறி அங்கேயும் வந்து விடுவார்கள் மனிதர்கள்."

"அப்படியானால் நிலவில் வைத்து விடுகிறேன். அல்லது, இந்தப் பிரபஞ்சத்தின் ஏதோ ஒரு மூலையில் உள்ள நட்சத்திரம் ஒன்றில் வைத்து விடுகிறேன். அங்கே அவர்களால் நிச்சயமாக வர முடியாது."

"இல்லை. அங்கே வருவதற்கும் அவர்கள் வாகனத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள். அவர்களுக்கு அப்படி ஒரு சக்தி வாய்ந்த திறனை அளித்திருக்கிறேன். மனிதர்கள் மற்ற பிராணிகளைப் போன்றவர்கள் அல்ல."

சொல்லி விட்டு சிறிது நேரம் யோசித்தான் இறைவன். "ம்...அந்த ரகசியமான இடம் என்னவென்று தெரிந்து விட்டது. வாழ்வின் சூட்சுமத்தை மனிதனுக்குள்ளேயே வைத்து விடு. அதுதான் ரொம்பவும் பத்திரமான இடம். சுலபத்தில் கண்டுபிடிக்க முடியாத இடம். அங்கே வைத்தால்தான் அதன் அருமை மனிதனுக்குத் தெரியும்..."

# வரலாற்றுத் தவறுகளையும் குற்றங்களையும் ஏற்றுக்கொள்ள சிங்களவர்கள் மறுக்கக் கூடாது

ஒரு வரலாற்றுத் தோல்வி ஒரு பூகம்பத்தைப் போன்று வரலாற்றுப் பேரழிவையும் ஏற்படுத்தும்
- டோனி ஜூட்.



கறுப்பு ஜூலையின் பாதை (மற்றும் அது வழங்கிய இடைநிறுத்தப்படாத நீண்ட ஈழப் போரும்) தவிர்க்கபபடக் கூடிய தவறுகளுக்கும், தேவையில்லாத குற்றங் களுக்கும் தளமிட்டுத் தந்தது. இந்தச் சரிநுட்பமற்ற கவிதைத் தொகுதி யிடையே விவாதத்துக்குரிய மிகவும் எரிச்சலூட்டும் விடயங்களில் ஒன்றாக விருப்பது, தமிழர் ஐக்கிய முன்னணி (ரி.யு.எப்) யினது ஆரம்ப அரசியல் முன்முயற்சிகள் பற்றியது.

தமிழர் ஐக்கிய முன்னணி (ரி.யு.எப) யினால் ஐக்கிய முன்னணி அரசாங்கத் துக்கு 1972 இல் வழங்கப்பட்ட பிரேர ணைகள் ஒரு மிதமான மாதிரியாகும். இருந்தாலும் பிரதமர் சிறிமாவோ பண்டா ரநாயக்காவோ அல்லது அவரது இடது சாரிக் கூட்டாளி (லங்கா சமமாஜக் கட்சி மற்றும் கொமியுனிஸ்ட் கட்சி) களோ ரி.யு. எப் பின் பிரேரணைகள் ஒரு முறை சார் நிராகரிப்புக்கே தகுதியானவை என்று உணர்ந்தன. வரலாற்றில் இடம்பெற வேண்டிய ரி.யு.எப் பின் பிரேரணைகள் குரூரமாகவும் அவ மதிக்கத்தக்க வகையிலும் குப்பைக் குவியலுக்குத் தான் அனுப்பப்பட்டன.

ரி.யு.எப். இனது கோரிக்கைகளில் பிரிவினைவாதமோ, இனவாதமோ அல லது விவேகமுள்ள சிங்களத் தேசிய வாதிகள் எவருக்கும் பகுத்தறிவின்படி மறுத்துரைப்பதற்கேற்ற எந்தவிதமான விடயமும் இடம்பெற்றிருக்கவில்லை. உண்மையில் அந்தப் பிரேரணைகள் ஆழ்ந்த ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு அமைவாக இருந்தன. அவை ஒவ்வொன் றும் ஐக்கிய இலங்கைக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்க வேண்டும். ரி.யு.எப் உணர்வு நிறைந்த மற்றும் பிரிவினை வாதப் பதங்களான அதிகாரப் பகிர்வு, பெடரலிசம் எனப்படும் கூட்டாட்சி என்பனவற்றை தெரிவிக்காமலிருப்பதில் கவனமாக இருந்திருக்க வேண்டும். அதற்கும் மேலாக ஐக்கிய முன்னணி (ரி. யு.எப்) அரசாங்கத்திடம் தேவைப்பட் டால் அரசியலமைப்பில் திருத்தங்கள் செய்வதற்குத் தேவையான மூன்றிலி ரண்டு பங்கு பெரும்பான்மை கைவசம் இருந்தது.

ரி.யு.எப் பின் நம்ப முடியாத மித வாதத் தன்மையான மாதிரிப் பிரேர ணைகளை ஏற்றுக்கொண்டு அமுல் படுத்துவதற்கு புறநிலை ரீதியாகவோ அறிவுபூர்வமாகவோ எந்தத் தடைகளும் இருக்கவில்லை. இருந்தாலும் அவற்றின் மீது விமர்சனம் தெரிவிக்கப்பட்டு தூற் றுதலுடனான புறக்கணிப்புக்கு உள்ளாகி இயற்கைக்கு மாறான மரணத்தை அடைந்தது.

நான்கு வருடங்களாக சமாதான வழி யில் பலவித போராட்டங்களையும் மேற்கொண்டதன் பின்னர் ரி.யு.எப் தனது பெயரை தமிழர் விடுதலைக் கூட்டணி (ரி.யு.எல்.எப்) என மாற்றிக்கொண்டு தனிநாட்டைக்கோரும் வட்டுக்கோட் டைத் தீர்மானத்தைப் பின்பற்றியது. ஐக்கிய முன்னணி (ரி.யு.எப்) அரசாங்கத் திற்கு மிதவாத ரி.யு.எப் பினது எதிர்ப் புத் தெரிவிக்க முடியாத கோரக்கை களை கையாள்வதற்கு ஏற்ற விவேக மும், தீர்க்கதரிசனமும் இருந்திருக்கு மாயின் பின்விளைவாக ஏற்பட்ட பல துயரச் சம்பவங்களை நல்ல விதமாகத் தவிர்த்திருக்கலாம்.

ஆனால் சிங்கள மேலாதிக்கவாதம் மற்றும் சந்தர்ப்பவாதம் என்பனவற்றின் கூட்டுக்கலவையினால் வெளிப்பட்ட அளவுக்கு மீறிய இறுமாப்பான குருட் டுத்தனமும் முட்டாள்தனமான அகங் காரமும் சேர்ந்து ஐக்கிய முன்னணி (ரி.யு.எப்) அரசாங்கத்தை அமைதியான ஜனநாயகப் பிரேரணைகளை தெரிவு செய்யும் பாதையை தடுத்ததோடு பல படிகள் தாண்டி ஒரு பேரழிவுப் போருக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து சேர்த்தது.

இலங்கைக்கு இந்த மிகப் பெரிய பேரழிவைத் தவிர்த்திருக்கக்கூடிய மற்று மொரு சந்தர்ப்பமும் கிட்டியது. ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சியின் 1977 ஆம் ஆண்டின் பாரம் பரிய தேர்தல் அறிக்கையில் தமிழர்க ளுக்கு பிரச்சினையிருப்பதாக ஏற்றுக் கொண்டதுடன் அதைத் தீர்ப்ப தாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தது.


இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் நட்டம் எற்படும் விதமாக அந்த வாக்குறு தியும் மீறப்பட்டது. வரலாற்று ரீதியாக மன்னிக்கமுடியாத பல தவறுகளை ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசாங்கம் இழைத்துள்ளது. அதில் ஒன்று கறுப்பு ஜூலையைத் தூண்டி விட்டார்கள் என தவறான குற்றம் சுமத்தி நீதியற்ற முறை யில் ஜே.வி.பியைத் தடை செய்தது. ஆனால் முந்தைய உயிர்த்துடிப்பான ஒரு தவறின் விளைவினாலேயே கறுப்பு ஜூலை உருவாகியது:

ஜனாதிபதி தான் 1977 ஆம் ஆண்டின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஒரு அரசியல் தீர்வினை ஏற்படுத்தி தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கப்படும் என்கிற வாக்குறுதிக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டார். 1977 தேர் தல்களில் ரி.யு.எல்.எப் பெற்ற நாடளா விய வெற்றி (வட்டுக்கோட்டைத் தீர் மானத்தை அதன் பிரதான தேர்தல்த் தளமாகக் கொண்டு) தமிழர்களின் அதிருப்தியின் எல்லையையும் மற்றும் அதைத் தணிப்பதற்கான அவசரத் தேவையையும் வெளிப்படுத்தியிருந் தது. ஆனால் இந்த அவசரமான விடயத்தில் ஜெயவர்த்தனாவின் நிர் வாகம் பேரழிவை ஏற்படுத்துவதில் கலக்கமில்லாத நெஞ்சழுத்தம் மிக்க முன்னோடி என நிரூபித்தது.

அந்தத் தேர்தலில் அவருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றிக்குப் பின் னர் ஜெயவர்த்தனா ஒரு சர்வகட்சி மாநாட்டை கூட்டியதுடன் ரி.யு.எல்.எப் உடன் பேச்சுக்களும் ஆரம்பிக்கப்படடது, நியாயமான தீர்வு ஒன்றும் (சிலவேளை களில் 13 ஆவது திருத்தத்தைப் போனற ஒன்று) எட்டப்பட இருந்தது. ஆயுதக் குழுக்கள் இயங்கிவந்த போதிலும் அவை அப்படியான ஒரு தீர்மானம் தங்களைத் தனிமைப்படுத்தி விடலாம் என்றோ அல்லது தங்களை மேலும் வலுவிழக்கச் செய்துவிடலாம் என்றோ கருதி அதனைத் தடை செய்வதற்கோ அல்லது சிதறடிப்பதற்கோ ஏற்ற பலத்தை இன்னமும் கொண்டிருக்க வில்லை. இன்னும் சட்டத்தை மதிப் பவர்களாகவும் இன்னமும் உயர்ந்த இயல்புகள் பலவற்றைக் கொண்டி ருந்தவர்களுமாகிய பெரும்பான்மை யான தமிழர்கள் ஜெயவர்த்தனா அமிர்தலிங்கம் உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும்.

அதற்கும் மேலாக 1977 தேர்தல்க ளில் வடக்கிற்கு ஒரு அரசியற் தீர்வை ஏற்படுத்துவதற்கான ஆணையை ஐ.தே.க தென்னிலங்கையிலிருந்து பெற்றிருந்தது. எஸ்.எல்.எப்.பி தனது வரலாறு காணாத தோல்வியிலினால் சுருண்டு போயிருந்தது. மற்றும் ஜே.வி.பி அதன் சரித்திரத்தில் மிகவும் மிதமான ஒரு நிலைப்பாட்டில் இருந்தது. இதன்படி ஒரு அரசியல் தீர்வினை தெற்கின் முக்கியமான எதிர்ப்புகள் எதுவுமின்றி வழங்கியிருக்கலாம்.

ஆனால் சாத்தியமாகக்கூடிய ஜெய வர்த்தனா அமிர்தலிங்கம் உடனபடிக்கை ஒருபோதுமே கிடைக்கவில்லை. அதன் முக்கியமான பிரசன்னம் கிட்டாமல் போனதினால் தமிழர் விடுதலைக்கு ஆயுதப் போராட்டமே தேவை என்கிற வாதத்திற்கு அது மாபெரும் நம்பிக் கையை வழங்கியது. பிரிவினைக்கான ஆயுதப் போராட்டம் என்கிற வாதம் வன்முறையான மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் மற்றும் யாழ்ப்பாண நூலக எரிப்புச்சம்பவத்துடன் மேலும் வீரியம் பெற்றதுடன் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடிய கறுப்பு ஜூலைக் குப் பிறகு தரக்கமற்ற ஆமோதிப்பாக



அமைந்தது.


ஜெயவர்த்தனா நிர்வாகம் கறுப்பு ஜூலையைத் தொடக்கி வைக்கவில்லை (சில அரசாங்க அமைச்சர்கள் அதில் முன்னணிக் கதாபாத்திரத்தை ஏற்றிருந் தார்கள். அதேவேளை அநேக ஐ.தே.க வினர் அதில் தரைப்படை வீரர்களைப் போலச் செயற்பட்டார்கள். ஆனால் அதே போல அநேக எஸ்.எல்.எப்.பி யினரும், ஜே.வி.பி யினரும் கட்சி பேத மற்ற பொதுமக்களும் அதில் பங்கெடுத்திருந் தார்கள்). ஒரு சிறிய கலவரம் நடை பெற்றிருந்தால் ஆட்சியாளர்கள் அதைப் பொருட்படுத்தியிருக்க மாட் டார்கள் ஆனால் காட்டுத்தீ போலப் பரவிய கொடூரம் அதிகாரத்தைப் பயன்படுத்துபவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது. சிங்களவர்களின் கோபத்தினைச் சாந்தப்படுத்தும் வித மாக இந்த மனிதப்படுகொலைகளை ஒரு கூட்டு மனிதத் தியாகம் எனச் சித்தரித்து இந்தத் திட்டமிட்ட செயல் மூலமாக ஜனாதிபதி ஆதாயம் தேட முயற்சித்தார். சிலவேளைகளில் அவர் நினைத்துக்கூட இருக்கலாம் (நம்பி னார்) தமிழர்களுக்கு பழக்கப்பட்ட அனுபவங்களின்படி இந்த வன்முறை அவர்களுக்கு அச்சமூட்டியுள்ளது என்று.

தமிழர்கள் வேற்றுக் கிரக வாசிகள் அல்லது பகையானவர்கள் என்கிற உணர்வுதான் கறுப்பு ஜூலையை இயக கிய ஒரே காரணி. மற்றது தமிழர்கள் திருப்பித் தாக்குவதற்கு தகுதியற்ற வர்கள் என்கிற நம்பிக்கை. தமிழ் ஆயுதக் குழுக்கள் உண்மையான அச்சுறுத்தலாக அப்போது காணப்பட வில்லை (அவர்களின் பாத்திரம் வசதிக் கேற்ற ஒரு பலியாட்டைப் போலவே இருந்தது).

வெறி பிடித்த சிங்களவரின் பிரதி பலிப்பு புலிகள் கொழும்பின் மீது தாக்கு தல் நடத்த வருகிறார்கள் என்கிற உறுதிப் படுத்தப்படாத கதை மூலம் தெரிய வந்தது (கூட்டம் எதிர்த்திசை நோக்கி அங்கேயும் இங்கேயுமாக தறிகெட்டு ஓடியது அவர்களில் பலரும் கொட்டி எனவோ (புலி வருகிறது) எனக் கூச் சலிட்டபடியே ஓடினார்கள்). மனநோய் பீடித்த சிங்களக் காடையர் கூட்டத்தின ரிடம் அதிர்ச்சி கிளைபரப்பியது. அவர்களின் பழிவாங்கும் சுதந்திரம் இந்த நம்பிக்கையினால் திடீரென எதிர்பாராமல் வீழ்ச்சியடைந்தது. (விதிவிலக்கான அந்த வீழ்ச்சிதான் ஜூலை 1983 இற்குப் பின், அனுராதபுரப் படுகொலைகளில் ஆரம்பித்து எண்ணற்ற அட்டூழியங்களைப் புலிகள் செய்த போதிலும் எந்தவிதமான பழிவாங்கும் வன்முறை நடவடிக்கைகளும் இடம் பெறாமல் போனதற்கு முக்கிய காரணம்).

நீண்ட ஈழப்போர் பின்தொடரந்தது. புலிகள் தங்கள் இலக்கை அடையும் நோக்கில் காட்டுமிராண்டித்தனமான செயல்களைப் புரிவதற்கும் வெட்கப் பட்டு விலகியிருக்கவில்லை. அவர்க ளின் அநாகரிகமான செயற்பாடுகள் சர்வதேச ரீதியாக அவர்களைத் தரம் தாழ்த்தியதுடன், தமிழ் மக்களைப் பொறுமையின் எல்லைக்கும் கொண்டு சென்றது. எல்.ரீ.ரீ.ஈ யின் குற்றம் சார்ந்த செயல்கள்தான் அவர்களின் இறுதி முடிவுக்கான அடிப்படைக் காரணங்களில் ஒன்று.

இந்திய - இலங்கை உடன்படிககை மற்றும் 13 ஆவது சட்டத்திருத்தம் என் பன இரண்டு சமூகங்களும் ஒன்றி ணைய இறுதியான ஒரு வாய்ப்பை



வழங்கியது. ஜெயவர்த்தனா நிர்வாகம் கண்டித்துத் திருத்தப்பட வேண்டிய நிலைக்கு வந்ததுடன் இந்தியா பிளவு படாத இலங்கைக்குள் தமிழரின் நலன்களைப் பாதுகாப்பதில் அக்கறை எடுத்துக் கொண்டதுடன் ஒரு நேர்மை யான இடைத்தரகராகவும் செயற் பட்டது. அந்தக் கடைசி வாய்ப்பும் தென்பகுதித் தீவிரவாதிகளின் தாரா ளமான உதவிகளுடன் எல்.ரீ.ரீ.ஈயி னால் அழிக்கப்பட்டது. அது நமக்கு போதிப்பது, உடன்படிக்கை எதிர்ப்புப் போராட்டத்தில் புலிகளுடன் அவர்க ளது சிங்கள வைரிகளாகக் காணப் படும் ஜே.வி.பியினர், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியினரின் முழு ஒப்புதலோடும் இணைந்து பங்குபற்றினார்கள் என்பதை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏனைய கடும்போக்காளர்களுடன் மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து ஜே.வி.பி யினரின் இந்தியாவுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்திச் செயற்படுத்தும் விதத்தில் ஒரு முக்கிய அரசியல் பிரசார பாத்திரத்தை (யதார்த்தத்தில் தென்பகுதியின் கவனம் தடையற்ற வற்புறுத்தல்கள் மற்றும் கலவரங் கள்மீது திரும்பும்படியான ஒரு பிரசார தந்திரம்) ஜே.வி.பி யினர் அவர்களின் முந்தைய அனுசரணை யாளர்கள் மீது திரும்பும் வரைக்கும் ஏற்று நடத்தினார்கள்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்க ளுக்குப் பிறகு திரு. மகிநத ராஜ பக்ஷ, எல்.ரீ.ரீ.ஈயினைத் தோற்கடித்து ஈழப் போரை முடித்துவைக்கும் முயற் சிகளுக்கு அரசியல் தலைமையினை வழங்கினார். இதில் எல்.ரீ.ரீ.ஈ மீண்டும் ஒருதடவை அவரைப் புறக்கணிக்கத் தக்க கூட்டு ஆயினர். சிறுவர்களை கட்டாயமாக இராணுவத்தில் சேர்த் தும், ஆயுதமற்ற நிராயுதபாணியான அரசியல்வாதிகளைக் கொலை செய் தும், மற்றும் தற்கொலைக் குண்டு தாரிகளைக் காட்சிப்படுத்தியும். புலிகள் தங்களை உள்நாட்டிலும் வெளிநாட்டி லும் தீண்டத்தகாதவர்களாக மாற்றிக் கொண்டனர். சிங்களவர்கள் வர லாற்றுத் தவறு களையும் குற்றங்க ளையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிற படியினால்தான் அது தவிர்க்க முடியாத போரை உருவாக்கி யது. அத்துடன் அவர்கள் கொடூரமான

(தொடர்ச்சி... 12 ஆம் பக்கம்)

# நிறைவுறும் நிலையில் மீள்குடியமர்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் தகவல்

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்தகால யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்திருந்த 88,618 பேர் இதுவரை மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் பணிமனை தகவல் வெளியிட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

செட்டிகுளம் நலன்புரி நிலையம், யாழ்ப்பாணத்திலிருந்த நலன்புரி நிலையம் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் இருந்தவர்கள் இவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதில் துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் முழுமையாக இடம்பெற்று முடிந்துள்ளது. ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் பெரும்பாலான கிராமங்களில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

கண்ணிவெடிகள், மிதிவெடிகள், அகற்றப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட இடங்களில் மீள்குடியேற்றம் இடம்பெற்று மக்கள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்தவாரம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மேலும் சில பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெடிபொருள் மீட்பு

பாவனைக்குதவாத நிலையிலிருந்த வெடிபொருள் ஒன்று நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் மிருசுவில் ஒட்டுவெளி என்னுமிடத்தில் மலசல குழி தோண்டும் போதே பொதுமக்கள் இதனைக் கண்டுள்ளனர். உடனடியாக அருகிலுள்ள இராணுவத்தினருக்கு அவர்கள் அறிவித்தனர். தற்போது இது செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. (19)

# வாக்காளர் பதிவு கொக்கிளாயில் துரிதம்

(கொக்கிளாய்)

கொக்கிளாய் பிரதேசத்தில் மீள்குடியமர்ந்துள்ள மக்களை வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கொக்கிளாய் கிராம சேவையாளரினால் மேற்கொள்ளப்படும் இப்பதிவு நடவடிக்கைளில் வாக்காளர் இடாப்பில் இதுவரை பெயர் பதியப்படாதவர்களும், ஏற்கனவே வாக்காளர் இடாப்பில் பெயர் உள்ளவர்களையும் உறுதிப்படுத்தும் நடவடிக்கையாகவே இப்பதிவுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# வாழ்வாதார உதவித் திட்டம் கிளிநொச்சியில் பாராபட்சம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு வாழ்வாதார மற்றும் மீள்குடியேற்ற உதவிகள் வழங்குவதில் முறைகேடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்களுக்கான உதவிகளை வழங்குவதில் கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன பாரபட்சமான முறையில் செயற்பட்டுவருவதாக பிரதேச மக்களினால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்து நிலையில் அன்றாட வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உதவிகளை தமக்கு வழங்காமல் இருப்பதுடன், பாரபட்சம் காட்டுவது வேதனைக்குரிய விடயம் என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயம் குறித்து அதிகாரிகள் மேலதிக கவனம் எடுத்து தமக்கான உதவிகள் கிடைக்க ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்ட இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (69)

# கௌரவிப்பு விழா

யாழ். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் பழைய மாணவரும் பேராசிரியருமான மா.கருணாநிதியின் கௌரவிப்பு விழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியசாலை பாலசண்முகம் ஜெயபாலன் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியசாலை அதிபர் செ.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா வழங்கவுள்ளார்.

பாராட்டுரைகளை யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன், கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் ஆ.க.மா.சிவபாதம், யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் சி.பி.சிவநாதன், யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொன்.பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து விழாநாயகன் கௌரவிப்பும், பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியர்கள் மற்றும் கடந்தவருடம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோருக்கு கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது. (109)

## அமெரிக்க விசா...

அனுமதிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் இணையத்தளங்களினூடாக விண்ணப்பிக்க முடியும்.

அந்நாட்டில் வேலைசெய்ய தகுதியானவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ள நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும். போலி முகவர்களிடம் விண்ணப்பித்து உங்கள் பணத்தை இழக்க முனைய வேண்டாம். சரியான தீர்மானத்தை எடுத்து அதற்கான வழியில் செயற்படவேண்டும் என அவர் தெரிவித்தார்.

## அரசியல் உரிமைகளை....

உண்மையை பேசவேண்டும் என்பதற்காக தமது பக்கம் வருமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா சம்பந்தன் அவர்கள் என்னையும் அழைத்திருப்பது வேடிக்கையானதொரு கூற்றாகும். இது இருண்ட வீட்டிற்குள் இருந்து கொண்டு கறுப்பு பூனையை தேடிக் கண்டு பிடிக்க என்னையும் வருமாறு கேட்பது போல் இருக்கிறது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எம்மைப் பொறுத்தவரையில் அங்கொரு பேச்சும் இங்கொரு பேச்சும் ஒரு போதும் இருந்ததில்லை. எமது மக்கள் மத்தியில் எதை நான் பேசுகின்றேனோ அதையே அரசாங்கத்திடமும் பேசி வருகின்றேன்.

எமது மக்களின் அன்றாட அவலங்களுக்கான தீர்வு முதற்கொண்டு அபிவிருத்திப்பணிகள் மற்றும் அரசியல் தீர்வு குறித்த விடயங்களையே நான் அரசாங்கத்துடன் இணக்கமாகப் பேசி அதில் எமது அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் முடிந்தளவு வெற்றிகளையும் ஈட்டி வந்திருக்கின்றேன். இது தவிர உங்களைப் போல் எமது சொந்த சலுகைகளுக்காக அரச உயர் மட்டப் பிரதிநிதிகளின் முன்பாக கை கட்டி குனிந்து வளைந்து நின்று ஒரு போதும் எதையும் நாம் கேட்டதில்லை.

அர்த்தமற்ற அரச எதிர்ப்பு அறிக்கைகளை அடிக்கடி வெளியிட்டாலும் அதே அரசுடன் பேசித்தான் எமது மக்களுக்கான சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். இதை உணர்ந்துதான் நாம் அரசாங்கத்தோடு வெளிப்படையாகவே கை குலுக்கி இணக்கமாகப் பேசி எமது மக்களுக்காக வாதாடியும் உண்மைகளை எடுத்துரைத்தும் வருகின்றோம்.

இதுவரை நீங்கள் தமிழ் மக்களை ஏமாற்றி பெற்று வந்த அரசியல் அதிகாரங்களை வைத்து எதை சாதித்தீர்கள்?.. உரிமையை பெற்று கொடுத்தீர்களா?.. அல்லது உரிமை கிடைக்கவில்லை என்று உங்களால் ஏமாந்த மக்களுக்கு ஒரு வேளை உணவாவது கொடுத்தீர்களா?..

தமிழர்களில் ஒற்றுமையை உலகுக்கு காட்டுமாறு கோரி 2004 இல் 22 நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றீர்கள். இதனால் எமது மக்களுக்கு நீங்கள் பெற்றுத்தந்தது என்ன?.. முள்ளிவாய்க்கால் படுகுழி வரை எமது மக்கள் இழுபட்டு செல்வதற்கு துணை போய் அதை பார்த்து ரசித்துக்கொண்டிருந்தீர்கள்.

ஆகவே உண்மையை பேசவும் உரிமையை பெறவும் நீங்கள்தான் சரியான திசை வழிக்கு வந்து சேரவேண்டியவர்களே அன்றி நாமல்ல. எமது மக்களின் அரசியல் உரிமைகளை பெறுவதற்கு நாம் சொல்வதை விடவும் நடைமுறைச் சாத்தியமானதொரு பாதையை நீங்கள் காட்டுவீர்களேயானால் அதை நோக்கி நாம் வருவதுபற்றிப் பரிசீலிப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் நீங்கள் காட்டும் திசை வழி என்பது தமிழ் மக்களை இன்னொரு அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லவே வழி வகுக்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களுக்கான சகல உரிமைகளையும் அடைவதற்கான உண்மையான வழிமுறை எது என்பதை வரலாறு தற்போது நிரூபித்து வருகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

## அரசின்...

நாம் வழங்கிய கால அவகாசத்தை அரசாங்கம் தனக்கு சாதகமாகவே பயன்படுத்தி வந்துள்ளது. இதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது. நாம் எழுத்தில் கையளித்த யோசனைகளுக்கு அரச தரப்பு எழுத்தில் தங்கள் நிலைப்பாட்டை இது வரை தெரிவிக்கவில்லை.

அரசுடனான பேச்சுக்களை நாம் தொடருவதா இல்லையா என்பது அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது என்று சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## பூகோளப்...

மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்தார்.

உலகம் விஞ்ஞான ரீதியாக பாரியளவில் வளர்ச்சியைக் கண்டிருந்தாலும் பூகோளமும் பாரிய பாதிப்பினை எதிர் கொண்டு வருகின்றது.

பூகோளம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்த சைக்கிள் சுற்றுப் பயணத்தினை மேற்கொள்ளவிருப்பதாகவும், இதனூடாக கின்னஸ் சாதனையை நிலைநாட்ட முடியும் என்றும், இந்தப் பயணம் யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு ஒரு காரணமும் இருக்கிறது.

அதாவது 30 வருடமாக ஏற்பட்ட யுத்தத்தின்போது பல பாதிப்புக்களை எதிர்நோக்கிய இப்பிரதேசத்தில் இயற்கைச் சூழல், சுகாதாரம் என்பன பாதுகாக்கப்படவேண்டும் என்பதையும் இந்தப் பயணம் வலியுறுத்துகிறது. அதுவே அக்காரணமுமாகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து இம்மாத இறுதிக்குள் இந்த சைக்கிள் சுற்றுப் பயணம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், 10 நாட்களில் இலங்கை முழுவதும் சென்றடைவதோடு தொடர்ந்து இப் பயணம் சர்வதேச ரீதியிலும் தொடரும்.

இச்சைக்கிள் சுற்றுப் பயணத்திற்கு ஆதரவு வழங்க அனைவரும் முன்வரவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த சைக்கிள் சுற்றுப் பயணத்தில் ஆதரவாளர்கள் சிலர் என்னுடன் தொடர்ந்து இணையவிருக்கிறார்கள். அவர்களுக்கான போக்குவரத்து செலவீனங்களுக்கு நிதியுதவி வழங்க நிறுவனங்களும், வர்த்தக மையங்களும் முன் வரவேண்டும் என்று கோரப்பட்டது. (எஸ்)

## ஏற்றுக்கொள்ளக்...

போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மூன்று முக்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றிற்கு 10 நாட்களுக்குள் உரிய தீர்வு கிடைக்க வேண்டும் எனவும், அவ்வாறில்லாவிட்டால் அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தைகளில் இருந்து விலகப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தது.

இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெளிவுபடுத்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

## ஆண் குழந்தை...

வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சபேசன் சயின் என்ற ஆண் குழந்தையின் சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழந்தை இறந்தமை தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் நேற்று மாலை எடுக்கப்பட்டதாகவும் அவ்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

## வடக்கு முஸ்லிம்களுக்கு...

முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு பெரிதும் தடையாகவுள்ள காரணிகளில் பிரதானமானது வீடமைப்புப் பிரச்சினையாகும் என அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.


இலங்கைக்கு இந்தியா 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முன்வந்தமைக்கு நன்றி தெரிவிப்பதாக கூறிய அமைச்சர் றிசாட் பதியுதீன், மேலதிகமாக முஸ்லிம்களது மீள்குடியேற்றத்திற்கு 30 ஆயிரம் வீடுகள் தேவைப்படுவதாகவும் அதனை பெற்றுத் தருவதற்கு ஆவண செய்யுமாறும் ஜனாதிபதியிடம் கோறிக்கையொன்றை முன் வைத்தார்.

அதேவேளை இந்திய அரசாங்கம் வழங்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவித்திட்டங்களில், வடமாகாண முஸ்லிம்களும் உள்வாங்கப்படுவதன் அவசியத்தையும் அமைச்சர் றிசாட் பதியுதீன், இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டேலிடம் எடுத்துரைத்துள்ளார்.

இந்திய அமைச்சரவையில் சுகாதார அமைச்சராகவுள்ள குலாம் நபி ஆஸாதையும் சந்தித்து முஸ்லிம்களது மீள்குடியேற்றத்துக்கு இந்திய அரசாங்கத்தின் பங்களிப்பை பெற்றுத் தருமாறு அமைச்சர் றிசாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார். இதை ஏற்றுக் கொண்ட அமைச்சர் குலாம் நபி ஆஸாத், அதற்கான உதவிகளை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையினை முன்னெடுப்பதாகவும் அமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

செய்திப்பாணம்

கடாப்பலி கொடுப்பதும் கடவுளுக்குஅடுக்காததா
விடாப்பிடி பசிப்பிணியை விலக்கவே - படாரென
பலப்பலி நடக்கும்பூ பாவம்பழி பார்த்தாலோ
நலமாக உயிர்வாழ நேரா!



## தேங்காய் விலை யாழில் சரிகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தேங்காயின் விலை வெகுவாகச் சரிந்து காணப்படுகின்றது.

சந்தைகளில் முன்னர் 40 ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் ஒன்று தற்போது 25 ரூபாவாகச் சரிந்து காணப்படுகின்றது.

அதனைவிடப் புத்தளத்தில் இருந்தும் வியாபாரிகளால் தினமும் தேங்காய் எடுத்து வரப்படுகின்றன. (வி)

## திண்ணபுர அந்தாதி நூல் வெளியீட்டு விழா

(யாழ்.நிருபர்)

காரைநகர் கார்த்திகேயப் புலவரின் "திண்ணபுர அந்தாதி" நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இ.குமார வடிவேல் பிரதம விருந்தினராகவும், அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

பிரதம விருந்தினர் நூலை வெளியிட்டு வைக்க, கல்விக் காருணியன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார். தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் அறு.திருமுருகன் பாராட்டுரை வழங்குவார். கவிஞர் இராசையா குகதாசன் பதிலுரை வழங்குவார். (10)

## பாரம் தூக்கி அறுந்து ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைத் துறைமுகத்தில் கப்பலில் இருந்த பாரம் தூக்கி அறுந்து அதனை இயக்கிக்கொண்டிருந்தவரது தலையில் விழுந்து பலமாக அடிபட்டதால் அவர் மரணமாகியுள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கடுகஸ்தோட்டையைச் சேர்ந்த டி.பி.ஜீ.சோமசிறி (வயது-51) என்பவரே மரணமானார்.

## தரக்குறைவான மருந்து இறக்குமதி தடுத்து நிறுத்த நடவடிக்கை

(கொழும்பு)

தரம்குறைந்த ஔடதங் களை இறக்குமதி செய்யும் இந்திய உற்பத்தி நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

அப்படியான நிறுவனங்களுக்கு எதிராக இந்தியச் சட்டங்களுக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் இந்திய சுகாதார அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இது தொடர்பாக தாம் விரிவாக ஆராய்ந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் இலங்கைக்கு ஔடதங்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளில் மாற்றம் செய்வது குறித்து பரிசீலித்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆய்வு நூல் வெளியீடு ஆக்கங்கள் கோரல்

(யாழ்.நிருபர்)

சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம் வெளியிடவுள்ள சைவ சித்தாந்த ஆய்வு நூலுக்கான பொருத்தமான கட்டுரைகள் சைவ சித்தாந்த அறிஞர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மலருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக 'சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம்' ஏழாலை மேற்கு, சுன்னாகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் கு.ரஜீவன் தெரிவித்துள்ளார். (10)

# கொழும்பு ஐ.தே.க.வின் கோட்டை

# வாக்கு வங்கியை சிதறடிக்க சதி

## சினம் கொள்கிறார் மங்கள சமரவீர



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையான கொழும்பு நகரில் அக்கட்சியின் வாக்கு வங்கியைச் சிதறடிக்க திரைமறைவில் சதி நடைபெற்று வருவதாக மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தவர்களையும் கொழும்பில் வருமானத்தைத் தேடிக்கொள்பவர்களையும் வேறு நகரங்களுக்கு விரட்டியடிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளைச் சிதறடிக்கும் சூழ்ச்சியாகும் என்று அக்கட்சியின் சார்பில் மங்கள சமரவீர நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

கொழும்பு நகரில் மக்கள் பரம்பரையாக வாழும் பிரதேசங்களிலேயே அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருக்கும்போது, அதற்குப் பதிலாக மக்களை வேறு பிரதேசங்களில் குடியேற்ற முயற்சிப்பதை ஏற்க முடியாது. இந்தநிலையின் கீழ் கார்டினல் மெல்கம் ரஞ்சித் ஆயர் போன்ற வணக்கத்துக்குரிய பதவி வகிக்கும் மதத் தலைவர் கொழும்பு மாவட்ட அரச தரப்பு எம்.பி. துமிந்த சில்வாவுடன் இணைந்து வடகொழும்பு தொகுதி மக்களுக்கு இதுபோன்ற அழுத்தங்களைக் கொடுப்பது வியப்பளிக்கின்றது.

கொழும்பு நகரை அழகுபடுத்தும் போர்வையில் பரம்பரை பரம்பரையாக வாழும் மக்களுக்கு சிறந்த வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறி கொழும்பிலுள்ள பெறுமதிமிக்க காணிகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்து, கமிஷன் பெறுவதே இதன் நோக்கமென சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமெனவும் மங்கள சமரவீர, நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகளுக்கு பால்மா விநியோகம் சத்தியசாயி சேவா நிலையம் ஏற்பாடு



(முல்லைத்தீவு)

தண்ணீரூற்று ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தால் முல்லைத்தீவு கரைத்துறைப் பற்று பிரதேசத்திற்குட்பட்ட இரண்டு மாதத்திற்கு மேற்பட்ட 2 வயதுக்குட்பட்ட குழந்தைகளையுடைய குடும்பங்களுக்கு பால்மா வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.00 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

நிலைய உப தலைவர் க.த[illegible]சா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 105 குடும்பங்களுக்கு பால்மா வழங்கப்பட்டது. இதேவேளை, நிலையத்தினால் தொடர்ச்சியாக ஒவ்வொரு மாதமும் 2 பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலகப் பல்கலைக்கழக விளையாட்டு விழா யாழ்.பல்கலை மாணவன் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

சீனாவின் ஷென்ஷேன் நகரில் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கும் 26 ஆவது உலகப் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒருவர் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட அரசறிவியற்றுறையில் கல்விகற்கும் மாணவன் தர்மரட்ணம் திரோன் கொடுதோர் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தடகள விளையாட்டு அணியின் வீரராக 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பங்கு பற்றுவதற்காக சீனாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார்.

இவர் முருங்கன், மன்னாரிலிருந்து சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையில் கல்வி பயின்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பாடசாலைப் பருவத்தில் தடகள விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்ததோடு, பல்கலைக்கழகத்தில் தடகள விளையாட்டு அணியிலும், உதைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் சேவையில் இளம் பட்டதாரிகள்

(கொழும்பு)

முதல் தடவையாக உப பொலிஸ் பரிசோதகர் (SUB- INSPECTOR) பதவிகளுக்காக பட்டதாரிகள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புதிதாக பொலிஸ் சேவையில் இணைந்து கொண்ட பட்டதாரிகளில் 22 பேர் உயர்தரப் பரீட்சையில் சகல பாடங்களில் அதி விசேட சித்[illegible]) பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உப பொலிஸ் பரிசோதகர் பதவிகளுக்காக 26,000 பேர் விண்ணப்பம் செய்திருந்த தாகவும் இதில் 201 பேர் மட்டும் தெரிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை தெரிவு செய்பபப்பட்டவர்களில் பலர் சிறந்த கல்விப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நகரசபைத் தலைவருக்கு கொலை மிரட்டல்

### வவுனியாவில் பரபரப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபைத் தலைவர் ஜயாத்துரை கனகையாவுக்கு நேற்றுக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

கடிதம் மூலம் இந்த மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

48 மணி நேரத்திற்குள் நகரசபை தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் அவ்வாறு செய்யத் தவறின் குடும்ப உறுப்பினர் ஒருவரை இழக்கநேரிடும், அடுத்த இலக்கு நீங்கள். அதனைத் தொடர்ந்து வீடு குண்டு வைத்துத் தகர்க்கப்படும் எனவும் இந்த மிரட்டல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் நகரசபைத் தலைவர் கனகையா புகார் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (39)

## குடும்பங்கள் வன்முறை பெண்களுக்கு அதிக பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறிய மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றது. குடும்ப வன்முறைகளினால் பெண்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவை பற்றிய முறைப்பாடுகள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமர் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் வலையமைப்பு முக்கிய புள்ளி கைது

(கொழும்பு)

புலிகளின் சர்வதேச வலையமைப்பின் இரண்டாம் நிலைத் தலைவர் என கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திவயின சிங்கள பத்திரிகையில் நேற்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. புலிகளின் சர்வதேச வலையமைப்பின் இரண்டாம் தலைவராகக் கருதப்படும் திருஞான சம்பந்தன் மணிவண்ணன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மணிவண்ணன், புலிகளின் சர்வதேச வலையமைப்பின் தலைவராகக் கருதப்படும் கஸ்ட்ரோவின் நெருங்கிய சகா எனத் தெரிவிக்கப்படுகிறது. மலேசியாவில் வைத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டதாகவும், இலங்கைக்கு விரைவில் நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் குறிப்பிடப்படுகிறது.

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் கைது செய்பய்பட்டதனைத் தொடர்ந்து, மணிவண்ணன் தலைமறைவாக வாழ்ந்து வந்ததார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொக்குவிலில் விபத்து இளைஞர் படுகாயம்

(கொக்குவில்)

கொக்குவில் பகுதியில் ஹயேர்ஸ் வானும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 9.00 மணிளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த சுதாகரன் (வயது-29) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஒகஸ்ட் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.